
புதிய வெளியீடுகள்




பக்: 148 | ரூ.80 பக்: 176 | ரூ.100 பக்: 122 | ரூ.40 பக்: 142 | ரூ.40




பக்: 170 | ரூ.90 பக்: 160 | ரூ.85 பக்: 328 | ரூ.150 பக்: 144 | ரூ.40 பக்: 198 | ரூ.100

சாகித்திய அகாதெமி

குணா காம்ளக்ஸ் இரண்டாவது தளம், (பின்புறம்),
443 (ப.எண்: 304) அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018 | தொலைபேசி: 24354815/24311741

வடிவமைப்பு : எக்சல் இமேஜ் கிரியேட்டர்

உள் ஓவியங்கள் : மார்ட்டின்,அருணகிரி, ராஜா, தூரிகா, ச.எழில்

KANAVU

# கனவு

எண் : 66



ம. தவசி ◇ சாந்தா தத் ◇ சுப்ரபாரதிமணியன் ◇ மொ. இளம்பரிதி ◇ ஜெ. நிஷாந்தினி ◇ இரகுராம் ◇ சிவதாசன் சம்யுக்தா ◇ வி.கே. ஜோசப் ◇ நிர்மால்யா ◇ கீதாஞ்சலிபிரியதர்ஷினி ◇ மகுடேசுவரன் ◇ இரத்தினமூர்த்தி ஆதலையூர் சுகுமாரன் ◇ ஆங்கரை பைரவி ◇ இரத்தின மூர்த்தி ◇ சாமக்கோடங்கி இரவி ◇ கரிகாலன்


கனவு
இதழ் எண் : 66
டிசம்பர் 2010
ரூ.8


Visit :
**keetru.com**
for KANAVU

முன் அட்டை ஓவியம் : தூரிகா

தொடர்புக்கு : **சுப்ரபாரதிமணியன்** 8/2635 பாண்டியன் நகர்,
திருப்பூர் - 641 602. தொலைபேசி : 94861 01003
kanavuthirupur@yahoo.co.in subrabharathi@gmail.com

**சுப்ரபாரதிமணியன் படைப்புகளின் வலைப்பூ :**
**rpsubrabharathimanian.blogspot.com**
Edited by : issundarakannan7@gmail.com




**சுப்ரபாரதிமணியனின்**

# சாயத்திரை

மொழிபெயர்ப்பில்

**ரங் ரங்கிலி சாதர் மெஹ்லி**
இந்தியில் : மீனாட்சி புரி
வெளியீடு : நீலகண்ட பிரகாசன்
மௌரலி, புது தில்லி
விலை : ரூ. 150

**The Coloured Curtain**
ஆங்கிலத்தில் : பி.ராஜ்ஜா
வெளியீடு : BRPC, New Delhi
விலை : ரூ. 150

*மலையாள மொழிபெயர்ப்பு*

**சாயம் புரண்ட திர**
மலையாளத்தில் : ஸ்டான்லி
வெளியீடு : 'சிந்தா'
திருவனந்தபுரம்
விலை : ரூ. 85

*கன்னட மொழிபெயர்ப்பு*

**பண்ணத் திர**
கன்னடத்தில் : தமிழ்ச்செல்வி
வெளியீடு : நவயுக
பெங்களூரு
விலை : ரூ. 100

சுப்ரபாரதிமணியனின்

**பிணங்களின் முகங்கள்**

**நாவல் ஆங்கிலத்தில்...**

**FACES OF THE DEAD**

மொழிபெயர்ப்பு
**ஆர்.பாலகிருஷ்ணன்**

வெளியீடு :
**கனவு**
பக்கங்கள் : 212 விலை : ரூ.170

## வேண்டுகோள் கனவு

அன்புடையீர்,

'வணக்கம், நலம் குறித்த விருப்பம்.

'கனவு' முதல் 20 ஆண்டுகளில் வெளிவந்த படைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் தொகுப்பு தற்போது 'காவ்யா', சென்னை வெளியீடாக வெளிவந்துள்ளது. விலை ரூ.350.

கனவு 22 ஆண்டுகளாக தொடர்ந்து தன்னளவில் நவீன இலக்கியத்திற்கு தன் பங்களிப்பைச் செய்து வருகிறது. அது தொடர்ந்து வெளிவர வேண்டிய எண்ணத்தில் தங்களிடம் ஆயுள் சந்தா ரூ.1000 (ஆயிரம் மட்டும்) எதிர்பார்க்கிறேன். உங்களின் பங்களிப்பில் 'கனவு' தொடர்ந்து வெளிவர இக்கடிதத்தைப் பரிசீலிக்க வேண்டுகிறேன். தொகையை KANAVU என்ற பெயரில் வரைவோலையாகவோ, காசோலையாகவோ அனுப்பி உதவுங்கள்.

அன்புடன்,

சுப்ரபாரதிமணியன்

## சுப்ரபாரதிமணியனின் சமீப நூல்கள்


- **தண்ணீர் யுத்தம்**
  *சுற்றுச்சூழல் கட்டுரைகள்; ரூ. 40, உயிர்மை*
- **நாளை மற்றுமொரு நாளல்ல**
  *திரைப்படக் கட்டுரைகள்; ரூ. 50, உயிர்மை*
- **மண்புதிது**
  *பயண நூல்; ரூ. 65, அறிவு, சென்னை*
- **கூண்டும் வெளியும்**
  *சிறுகதைகள்; ரூ. 80, என்சிபிஎச்*
- **விமோசனம்**
  *சிறுகதைகள் (தொகுப்பு : வி.டி.சுப்ரமணியன்)*
  *ரூ. 90, காவ்யா*
- **ஆழம்**
  *சிறுகதைகள்; ரூ. 50, அறிவு*
- **பள்ளி மறுதிறப்பு**
  *சிறுவர் கதைகள்; ரூ. 10, யுரேகா*
- **ஓ... செகந்திராபாத்**
  *ரூ. 60, உயிர்மை*





# அவளோடு அலையும் வெயில்

## ம. தவசி



ஓவியம் : ராஜா

'ஏங்க வெயிலுக்கு வெள்ளரி பிஞ்சு கிடந்தா வாங்கிட்டு வாங்க..'

வண்டியை எடுக்கும் போது மனைவி வாசலில் நின்று சொன்னாள். முற்றத்தில் நின்று பாம்பு போல் உஸ்..உஸ்.. யென சீறிக் கொண்டிருந்தது வெயில். கால் வைக்க கடி எறும்பு போல் உடல் முழுவதும் ஊறும். சடசடத்து பெய்யும் வெயிலில் தயவுதாட்சண்யம் இல்லை. வெளியில் ஓடி வந்த இரண்டு வயது மகன் 'ஆ.. சுடுது..' என அழுதான். எனக்கும் கூட குளிர்ச்சியாய் ஏதாவது சாப்பிடத் தோன்றியது. வண்டி பெரியமார்க்கெட் நோக்கி உருண்டது. கையில் அதிக பணம் இல்லை. கூடவே துரத்தி வரும் வெயில். வானம் சூடு தாங்காமல் கொணங்கி கிடந்தது. காலையில் சாலையோரம் கீரை, காய்கறிகள், கறிவேப்பிலை, புதினா, பெரும் பூசணி, தேங்காய், முறுங்கை, பூக்களை விற்ற பெண்களை காணவில்லை. கடைக்காரர்கள் மட்டும் பொருளாய் உட்கார்ந்திருந்தனர். யோக்குவரத்து போலீஸ் போல கையில் கம்புடன் வெயில் தெருக்களில் சுற்றித் திரிந்திருக்க வேண்டும். நடமாட்டம் குறைவாக இருந்தது. ஆனந்தரங்க பிள்ளை வீதி வழியாக போய் நேரு வீதி வழியாக திரும்பினேன். நேராக போனால் கடலில் போய் முட்டும். எந்த சாலையில் நடந்தாலும் இரண்டு மூன்று கிலோ மீட்டரில் கடல்தான் வரவேற்கும். வெள்ளரி விற்கும் யாரையும் காணோம். நேரு வீதியில் இடித்துக் கொண்டிருந்த வண்டிகளில் வெயில் மிணுங்கிக் கொண்டிருந்தது. நெருக்கமான வாகனங்களில் அடிபடாமல் ஒரு நாய் ஓடி வந்தது. அதன் நாக்கு நீளம் அதிகம். நெடுகிலும் வாணியை வடித்து போனது. கொட வயிர்.

மார்க்கெட் ஆரம்பிக்கும் வாசலில் வண்டியை நிறுத்தி விட்டு, காய்கறி கடைக்காரர்களை கடந்து போக கூட்டம் குறைவாக இருந்தாலும் பேச்சரவம் அதிகம். கத்திரி கிலோ இருபது ரூபாய்.. தக்காளி பதினைஞ்சு ரூபாய்... வெங்காயம் பத்து.. என ஒருவர் கூவிக் கொண்டிருந்தார். தற்போது பரவாயில்லை விலை. மூன்று வாரங்களுக்கு முன் பெரியவெங்காயம் ஒரு கிலோ அறுபதி ரூபாய்க்கு விற்றது. தக்காளியும் அப்படித்தான். அப்பொதெல்லாம் மார்க்கெட்டுக்கு வரவே அச்சமாக இருக்கும். ஒருமுறை இரனூறு ரூபாய் கொண்டு வந்து பூண்டும், தக்காளியும் வாங்க முடிந்திருந்தது. மீதி காய்கறி வாங்க காசில்லை. ' பவுனு விலையிலே விற்றா என்ன செய்வது..' புலம்பிக் கொண்டே வீடு வந்து விட்டேன்.

வழக்கமாய் மார்க்கெட் துவக்கத்தில் பெண்கள் இருபுறமும் அமர்ந்து சாக்கில் விரித்து காய்கறிகளை வைத்திருப்பர். பாலீத்தீன் சாக்குகள். மார்க்கெட் பிளாட்பார கடை போலும். அங்குதான் சுரக்காய், பீர்க்கங்காய், சீனிவரைக்காய், பாவை என ஊர்க் காய்கள் கிடைக்கும். அதிலும் சிறு பாவக்காய், அங்கு விட்டால் வாங்க முடியாது. கடைகளில் எல்லாம் பெரும் பாவக்காய்தான். கொம்பம் பாவக்காய். அதைப் பார்த்தாலே ஏதோ செடிகளில் ஊர்ந்து தெரியும் தோரை ஞாபகம் வந்துவிடும். அதிலும் பச்சோந்தி. வால் நீட்டி ஒன்றன்மேல் ஒன்றை அடுக்கிப் போட்டிருப்பர். வாங்கி தின்றாலும் நறுச்நறுச்சென இருக்கும். லேசாக ஒரே வாயில் போடும் பொடிப் பாவக்காய் தின்றே பழக்கப்பட்டு போனது.

' பந்தலில் பாவக்காய் தொங்குதடி ஆத்தாடி.. அதை விதைக்குத் தானே விட்டிருக்கேன்..' எனக்கு பாவைக்காய் பார்த்த நேரமெல்லாம் இழவு வீட்டுக் கதை வந்து நிற்கும். எவ்வளவு அழகாய் போகிற போக்கில் சொல்லியிருக்கிறான்.. ஏனோ இரண்டொரு கருமாதி வீடுகளில் நடந்த சண்டைகள் விரிந்தது. ஏதாவது ஒரு சரடை எடுத்து பெரிய மாலையாக கட்டி விடுகிறது நினைவு.

பேசாமே.. வெள்ளரி வாங்கிட்டுப் போகமாட்டே..' நான் என் மனத்தை அதட்டினேன். அது சிரித்துக் கொண்டு வாலாட்டியது.

யாரிடமும் இல்லை. எல்லாம் சர்க்கரை பூசணியை வகுந்து சீப்பு.. ஐந்து ரூபா.. வெண்டை பத்து ரூபா என கத்திக் கொண்டிருந்தனர். கொள்ளைகளில் பெரிசுபெரிசாய் கிடக்கும் பெரும் பூசணியும், சர்க்கரைப் பூசணியும் இன்று ஒத்த சீப் ஐந்து ரூபா.. நானா முனுமுனுத்துக் கொண்டேன். மூட்டையாக கட்டி வாகனத்தில் ஏற்றினால் எல்லாவற்றுக்கும் மவுசு வந்து விடும் போலிருக்கு.. ஆனால் வெயிலில் வெந்து விவசாயம் பார்த்தவனின் நிலை..?

நான் வெறுங்கையோடு வந்து வண்டியை எடுத்தேன். உட்காரும் சீட் பொசுக்கியது. அதற்குள் தீயை கொளுத்தி விட்டு போயிருந்தது வெயில். சாலையோரம் காலையில் பார்த்த ஈரச் சுவடு இல்லை. லேசாக மஞ்சள் பிடித்திருக்கும் வெயிலின் பல்லில் தீரா வேட்கை. ஒருக்கால் ஊத்தைப் பல்லாய் இருக்கலாம். கண்டது கழியதை தின்றால் ஊத்தை வராமல் எப்படி இருக்கும்..?

ராஜா தியேட்டர் சிக்னலில் நின்றேன். சுற்றிலும் வாகனங்கள். மத்தியில் கானல் வரி வரியாய் ஓடிக் கொண்டிருந்தது. காலில் மாட்டிய ஜூவால் தப்பினார் போக்குவரத்து போலீஸ். தொப்பியைத் தாண்டி மண்டையில் வெயில் இறங்கி இருக்க வேண்டும். அடிக்கடி தொப்பியை கழற்றி வியர்வையைத் துடைத்தார். சிக்னல் போட்டவுடன் வண்டிகளின் வேகம் அதிகரித்தது. நான் ராஜா தியேட்டர் போஸ்டரை பார்த்துக் கொண்டே வந்தேன். அதன் கீழ் கரும்பு ஜூஸ் விற்றுக் கொண்டிருந்தார் ஒருவர். நாலைந்து பேர் வாங்கி பருகினர். எனக்கும் கூட குடிக்க ஆசை. ஏனோ பிள்ளைகள் ஞாபகம் வந்தது. நிறுத்தாமல் வண்டியை ஓட்டினேன். சாரம் பாலம் இடது ஓரம் ஏற்கனவே நொங்கு வாங்கியிருக்கேன். வண்டி டயர்கள் விருவிருவென காய்ந்து வந்தது. அடுத்தடுத்த சூட்டில் அது என்ன செய்யும் பாவம்.?

சாரம் பாலம் வந்தது. அங்கு நாலைந்து பெண்கள் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு வியாபாரம் பார்த்தனர். ஒருவர் நொங்கு, இரண்டுபேர் பனங்கிழங்கு. ஒருவர் மோர். மற்றொருவர் வெள்ளரிக்காய். அப்பாடா.. இருக்கிறது. அதன் பக்கத்தில் காலையில் போட்ட பக்கோடாவை வண்டியில் ஒருவர் மலைபோல் அடுக்கி வைத்திருந்தார். ஒருக்கால் மாலையில் விற்பனையாகக் கூடும். பக்கோடா வண்டியில் போட்ட பாலீத்தின் கூரையில் சூரியன் ஓட்டைப் போட்டுக் கொண்டிருந்தான். அது, வாங்கிய வெயிலை கொப்பளிக்க நாலாபக்கமும் சிதறியது. வண்டியை நிறுத்தி விலை கேட்டேன்..

' எவ்வளவும்மா..?'

அந்த பெண் குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள். முதுகில் முதுமை தெரிந்தது. நரைத்த முடி எண்ணெய் தேய்க்காமல் கானப்பறந்து கொண்டிருந்தது. வெளுத்துப் போன பச்சை நிறத்தில் சேலை அணிந்திருந்தாள்.

' இருப்பா.. வாரேன்..' என வெள்ளிரி விரித்திருந்த சாக்கை ஒரு ஓரமாகக் தூக்கி கைவிட்டுத் தேடினாள். ஏதோ கிடைத்திருக்க வேண்டும்.

' பயவில்லை பையி.. அதுவா நகண்டு நகண்டு போயிருது... கைக்கே அகப்பட மாட்டீங்கு..' என நிமிர்ந்து பார்த்தாள். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆமாம். அச்சு அசலாய் வள்ளியம்மை ஆத்தா. அதே கண். தண்டட்டி ஆடும் பெரிய காது. காதோரம் பெரிய சைசில் அரும்பாலை. கண்ணத்தில் விழுந்த வரிவரிக்கோடு. நிச்சிலையாய் பார்த்து நின்றேன்.

' ஏம்ப்பு.. வெள்ளரியா வேணும்.. ஒரு கிலோ இருபத்தைந்து ரூபாப்பா..' வார்த்தையில் குலைவு.

வெயிலை குடித்து கருத்த முகம். ஆத்தாவும் அப்படித்தான். காலம்பூராம் காட்டிலே கிடந்து வெந்து போன விறகுக் கட்டை மாதிரி இருப்பாள்.

' ஏம்ப்பா.. பார்த்துக்கிட்டே இருக்கே.. வெள்ளரி பிஞ்சுப்பா.. இனிச்சுக் கிடக்கும்..'

நான் ஒன்றும் சொல்லாமல் காசைக் கொடுத்து ஒரு கிலோ வாங்கிக் கொண்டு வண்டியை எடுத்தேன். மீண்டுமாக பார்க்கும்போது ஆத்தா வந்து நின்றாள்.

' பந்தலில் பாவக்காய் தொங்குதடி ஆத்தாடி.. அதை விதைக்குத் தானே விட்டிருக்கேன்..' எனக்கு பாவைக்காய் பார்த்த நேரமெல்லாம் இழவு வீட்டுக் கதை வந்து நிற்கும். எவ்வளவு அழகாய் போகிற போக்கில் சொல்லியிருக்கிறான்.. ஏனோ இரண்டொரு கருமாதி வீடுகளில் நடந்த சண்டைகள் விரிந்தது. ஏதாவது ஒரு சரடை எடுத்து பெரிய மாலையாக கட்டி விடுகிறது நினைவு

பேசாமே.. வெள்ளரி வாங்கிட்டுப் போகமாட்டே..' நான் என் மனத்தை அதட்டினேன். அது சிரித்துக் கொண்டு வாலாட்டியது. .



யாரிடமும் இல்லை. எல்லாம் சர்க்கரை பூசணியை வகுந்து சீப்பு.. ஐந்து ரூபா.. வெண்டை பத்து ரூபா என கத்திக் கொண்டிருந்தனர். கொள்ளைகளில் பெரிசுபெரிசாய் கிடக்கும் பெரும் பூசணியும், சர்க்கரைப் பூசணியும் இன்று ஒத்த சீப் ஐந்து ரூபா.. நானா முனுமுனுத்துக் கொண்டேன். மூட்டையாக கட்டி வாகனத்தில் ஏற்றினால் எல்லாவற்றுக்கும் மவுசு வந்து விடும் போலிருக்கு.. ஆனால் வெயிலில் வெந்து விவசாயம் பார்த்தவனின் நிலை..?

நான் வெறுங்கையோடு வந்து வண்டியை எடுத்தேன். உட்காரும் சீட் பொசுக்கியது. அதற்குள் தீயை கொளுத்தி விட்டு போயிருந்தது வெயில். சாலையோரம் காலையில் பார்த்த ஈரச் சுவடு இல்லை. லேசாக மஞ்சள் பிடித்திருக்கும் வெயிலின் பல்லில் தீரா வேட்கை. ஒருக்கால் ஊத்தைப் பல்லாய் இருக்கலாம். கண்டது கழியதை தின்றால் ஊத்தை வராமல் எப்படி இருக்கும்..?

ராஜா தியேட்டர் சிக்னலில் நின்றேன். சுற்றிலும் வாகனங்கள். மத்தியில் கானல் வரி வரியாய் ஓடிக் கொண்டிருந்தது. காலில் மாட்டிய ஜூவால் தப்பினார் போக்குவரத்து போலீஸ். தொப்பியைத் தாண்டி மண்டையில் வெயில் இறங்கி இருக்க வேண்டும். அடிக்கடி தொப்பியை கழற்றி வியர்வையைத் துடைத்தார். சிக்னல் போட்டவுடன் வண்டிகளின் வேகம் அதிகரித்தது. நான் ராஜா தியேட்டர் போஸ்டரை பார்த்துக் கொண்டே வந்தேன். அதன் கீழ் கரும்பு ஜூஸ் விற்றுக் கொண்டிருந்தார் ஒருவர். நாலைந்து பேர் வாங்கி பருகினர். எனக்கும் கூட குடிக்க ஆசை. ஏனோ பிள்ளைகள் ஞாபகம் வந்தது. நிறுத்தாமல் வண்டியை ஓட்டினேன். சாரம் பாலம் இடது ஓரம் ஏற்கனவே நொங்கு வாங்கியிருக்கேன். வண்டி டயர்கள் விருவிருவென காய்ந்து வந்தது. அடுத்தடுத்த சூட்டில் அது என்ன செய்யும் பாவம்.?

சாரம் பாலம் வந்தது. அங்கு நாலைந்து பெண்கள் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு வியாபாரம் பார்த்தனர். ஒருவர் நொங்கு, இரண்டுபேர் பனங்கிழங்கு. ஒருவர் மோர். மற்றொருவர் வெள்ளரிக்காய். அப்பாடா.. இருக்கிறது. அதன் பக்கத்தில் காலையில் போட்ட பக்கோடாவை வண்டியில் ஒருவர் மலைபோல் அடுக்கி வைத்திருந்தார். ஒருக்கால் மாலையில் விற்பனையாகக் கூடும். பக்கோடா வண்டியில் போட்ட பாலீத்தின் கூரையில் சூரியன் ஓட்டைப் போட்டுக் கொண்டிருந்தான். அது, வாங்கிய வெயிலை கொப்பளிக்க நாலாபக்கமும் சிதறியது. வண்டியை நிறுத்தி விலை கேட்டேன்..

' எவ்வளவும்மா..?'

அந்த பெண் குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள். முதுகில் முதுமை தெரிந்தது. நரைத்த முடி எண்ணெய் தேய்க்காமல் கானப்பறந்து கொண்டிருந்தது. வெளுத்துப் போன பச்சை நிறத்தில் சேலை அணிந்திருந்தாள்.

' இருப்பா.. வாரேன்..' என வெள்ளிரி விரித்திருந்த சாக்கை ஒரு ஓரமாகக் தூக்கி கைவிட்டுத் தேடினாள். ஏதோ கிடைத்திருக்க வேண்டும்.

' பயவில்லை பையி.. அதுவா நகண்டு நகண்டு போயிருது... கைக்கே அகப்பட மாட்டீங்கு..' என நிமிர்ந்து பார்த்தாள். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆமாம். அச்சு அசலாய் வள்ளியம்மை ஆத்தா. அதே கண். தண்டட்டி ஆடும் பெரிய காது. காதோரம் பெரிய சைசில் அரும்பாலை. கண்ணத்தில் விழுந்த வரிவரிக்கோடு. நிச்சிலையாய் பார்த்து நின்றேன்.

' ஏம்ப்பு.. வெள்ளரியா வேணும்.. ஒரு கிலோ இருபத்தைந்து ரூபாப்பா..' வார்த்தையில் குலைவு.

வெயிலை குடித்து கருத்த முகம். ஆத்தாவும் அப்படித்தான். காலம்பூராம் காட்டிலே கிடந்து வெந்து போன விறகுக் கட்டை மாதிரி இருப்பாள்.

' பந்தலில் பாவக்காய் தொங்குதடி ஆத்தாடி.. அதை விதைக்குத் தானே விட்டிருக்கேன்..' எனக்கு பாவைக்காய் பார்த்த நேரமெல்லாம் இழவு வீட்டுக் கதை வந்து நிற்கும். எவ்வளவு அழகாய் போகிற போக்கில் சொல்லியிருக்கிறான்.. ஏனோ இரண்டொரு கருமாதி வீடுகளில் நடந்த சண்டைகள் விரிந்தது. ஏதாவது ஒரு சரடை எடுத்து பெரிய மாலையாக கட்டி விடுகிறது நினைவு.

' பேசாமே.. வெள்ளரி வாங்கிட்டுப் போகமாட்டே..' நான் என் மனத்தை அதட்டினேன். அது சிரித்துக் கொண்டு வாலாட்டியது.

யாரிடமும் இல்லை. எல்லாம் சர்க்கரை பூசணியை வகுந்து சீப்பு.. ஐந்து ரூபா.. வெண்டை பத்து ரூபா என கத்திக் கொண்டிருந்தனர். கொள்ளைகளில் பெரிசுபெரிசாய் கிடக்கும் பெரும் பூசணியும், சர்க்கரைப் பூசணியும் இன்று ஒத்த சீப் ஐந்து ரூபா.. நானா முனுமுனுத்துக் கொண்டேன். மூட்டையாக கட்டி வாகனத்தில் ஏற்றினால் எல்லாவற்றுக்கும் மவுசு வந்து விடும் போலிருக்கு.. ஆனால் வெயிலில் வெந்து விவசாயம் பார்த்தவனின் நிலை..?

நான் வெறுங்கையோடு வந்து வண்டியை எடுத்தேன். உட்காரும் சீட் பொசுக்கியது. அதற்குள் தீயை கொளுத்தி விட்டு போயிருந்தது வெயில். சாலையோரம் காலையில் பார்த்த ஈரச் சுவடு

இல்லை. லேசாக மஞ்சள் பிடித்திருக்கும் வெயிலின் பல்லில் தீரா வேட்கை. ஒருக்கால் ஊத்தைப் பல்லாய் இருக்கலாம். கண்டது கழியதை தின்றால் ஊத்தை வராமல் எப்படி இருக்கும்..?

ராஜா தியேட்டர் சிக்னலில் நின்றேன். சுற்றிலும் வாகனங்கள். மத்தியில் கானல் வரி வரியாய் ஓடிக் கொண்டிருந்தது. காலில் மாட்டிய ஜூவால் தப்பினார் போக்குவரத்து போலீஸ். தொப்பியைத் தாண்டி மண்டையில் வெயில் இறங்கி இருக்க வேண்டும். அடிக்கடி தொப்பியை கழற்றி வியர்வையைத் துடைத்தார். சிக்னல் போட்டவுடன் வண்டிகளின் வேகம் அதிகரித்தது. நான் ராஜா தியேட்டர் போஸ்டரை பார்த்துக் கொண்டே வந்தேன். அதன் கீழ் கரும்பு ஜூஸ் விற்றுக் கொண்டிருந்தார் ஒருவர். நாலைந்து பேர் வாங்கி பருகினர். எனக்கும் கூட குடிக்க ஆசை. ஏனோ பிள்ளைகள் ஞாபகம் வந்தது. நிறுத்தாமல் வண்டியை ஓட்டினேன். சாரம் பாலம் இடது ஓரம் ஏற்கனவே நொங்கு வாங்கியிருக்கேன். வண்டி டயர்கள் விருவிருவென காய்ந்து வந்தது. அடுத்தடுத்த சூட்டில் அது என்ன செய்யும் பாவம்.?

சாரம் பாலம் வந்தது. அங்கு நாலைந்து பெண்கள் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு வியாபாரம் பார்த்தனர். ஒருவர் நொங்கு, இரண்டுபேர் பனங்கிழங்கு. ஒருவர் மோர். மற்றொருவர் வெள்ளரிக்காய். அப்பாடா.. இருக்கிறது. அதன் பக்கத்தில் காலையில் போட்ட பக்கோடாவை வண்டியில் ஒருவர் மலைபோல் அடுக்கி வைத்திருந்தார். ஒருக்கால் மாலையில் விற்பனையாகக் கூடும். பக்கோடா வண்டியில் போட்ட பாலீத்தின் கூரையில் சூரியன் ஓட்டைப் போட்டுக் கொண்டிருந்தான். அது, வாங்கிய வெயிலை கொப்பளிக்க நாலாபக்கமும் சிதறியது. வண்டியை நிறுத்தி விலை கேட்டேன்..

‘ எவ்வளவும்மா..?’

அந்த பெண் குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள். முதுகில் முதுமை தெரிந்தது. நரைத்த முடி எண்ணெய் தேய்க்காமல் கானப்பறந்து கொண்டிருந்தது. வெளுத்துப் போன பச்சை நிறத்தில் சேலை அணிந்திருந்தாள்.

‘ இருப்பா.. வாரேன்..’ என வெள்ளிரி விரித்திருந்த சாக்கை ஒரு ஓரமாகக் தூக்கி கைவிட்டுத் தேடினாள். ஏதோ கிடைத்திருக்க வேண்டும்.

‘ பயவில்லை பையி.. அதுவா நகண்டு நகண்டு போயிருது... கைக்கே அகப்பட மாட்டீங்கு..’ என நிமிர்ந்து பார்த்தாள். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆமாம். அச்சு அசலாய் வள்ளியம்மை ஆத்தா. அதே கண். தண்டட்டி ஆடும் பெரிய காது. காதோரம் பெரிய சைசில் அரும்பாலை. கண்ணத்தில் விழுந்த வரிவரிக்கோடு. நிச்சிலையாய் பார்த்து நின்றேன்.

‘ ஏம்ப்பு.. வெள்ளரியா வேணும்.. ஒரு கிலோ இருபத்தைந்து ரூபாப்பா..’ வார்த்தையில் குலைவு.

வெயிலை குடித்து கருத்த முகம். ஆத்தாவும் அப்படித்தான். காலம்பூராம் காட்டிலே கிடந்து வெந்து போன விறகுக் கட்டை மாதிரி இருப்பாள்.

‘ ஏம்ப்பா.. பார்த்துக்கிட்டே இருக்கே.. வெள்ளரி பிஞ்சுப்பா.. இனிச்சுக் கிடக்கும்..’

நான் ஒன்றும் சொல்லாமல் காசைக் கொடுத்து ஒரு கிலோ வாங்கிக் கொண்டு வண்டியை எடுத்தேன். மீண்டுமாக பார்க்கும்போது ஆத்தா வந்து நின்றாள்.

‘ பாண்டிய ராஜனே.. இப்படி நரியா வந்து தெரியுறான்..’ என ஆரம்பித்தாள். நான் அவளையும், வெயிலையும் மாறி மாறி பார்த்து கேட்க, வேண்டா வெறுப்பாக வெயிலும் உம் கொட்டியது. விற்றுக் கொண்டிருப்பாள்.

எவ்வளவு காடுகள்.. வண்டி வண்டியாய் வெள்ளரி பறித்த கை.. இம்மி அளவுக்கு காயை போட்டு வேகாத வெயிலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது. மனதை போட்டு பிசைய பிசைய கண்ணீர் தானாக வழிந்தோடும். பிள்ளைகள் மூப்பெடுத்து தனித்தனியாக போக வெள்ளரி விற்று கஞ்சி குடித்துக் கொண்டிருந்தாள் ஆத்தா.

‘ முதுகுளத்தூர் கண்மாயிலே போட்டதுப்பா.. கொஞ்ச இடம்தான்..’ என அதே சிரிப்புடன் வாடி வதங்கிய முகத்தோடு சொல்லிக் கொண்டிருப்பாள்.

அம்மா இறந்த பின் அப்பா, அண்ணன், நான் என யாரும் கூப்பிட்டும் வீட்டுக்கு வர மறுத்தாள்.


‘ சும்மா எப்படிப்பா உட்கார்ந்து கஞ்சி குடிப்பது.. உசுரோட இருக்கும் வரைக்கும் ஊந்து தெரியுறேன்.. இந்தாப்பா. இதை பிள்ளைகளிடம் கொடு..’

நான் வெகுநேரம் முற்றத்தில் நிற்கும் வெயிலை பார்த்துக் கொண்டிருந்தேன். ‘ இந்தாப்பு.. கொண்டு போ.. இனிச்சு கிடக்கும்..’ வெயிலோடு அவளது குரல். இன்னும் அவளோடுதான் வெயில் அலைந்து கொண்டிருப்பதாகப் பட்டது.



# நீள் வலி

## சம்யுக்தா


ஓவியம் : தூரிகா

தெருவெல்லாம் சிதறிக்கிடந்தன சந்திராவின் தலையில் வைக்கப்பட்டிருந்த மல்லிகைப் பூக்கள். குழந்தைகள் யாரும் விளையாடாத வண்ணம் அனைத்துக் கதவுகளும் அடைத்துக் கிடந்தன. ஊர் பாலத்தைத் தாண்டிய அவள் அம்மாவின் ஓலம் அம்பட்டையனின் சங்கொலியில் அமுங்கியது. அந்திக்கு மேல் புகை வாடை சுவாசித்து வெளியேறின சில பாம்புகள். கங்கு பொறிந்த சிதைக்குள் வெந்து கொண்டிருந்தது இது கணம் வரை சந்திரா என அழைக்கப்பட்ட பெண்ணுடல்.

*காட்சி 1*

*சாட்சி:*

பொம்மிநாயக்கன்பட்டி பள்ளிக்கூட தெருவின் சில மனிதர்கள், அவர்களின் மூதாதைகளின் ஆவி, அவர்களின் பேரக்குழந்தைகள், சில ஆடுகள், சில மாடுகள்,இரண்டு வைக்கோல் போர்கள், காக்கை பித்ருக்கள், கருப்பசாமி கல், சில சுவர்கள், மதிய வேளையின் ஈரப்பதம் உணர்த்தும் காத்து, மனிதர்களின் மனவெளியில் இயங்கும் கறுப்பு, சில பூச்சிகள் மற்றும் சம்பவம் நிகழ்ந்த அந்த கணம்.

*உரையாடல் 1*

"இந்த தடவ உங்கம்மா அவள் ஏன் அனுப்பல"

"போன தடவ என்ன நடந்ததுன்னு அவங்களுக்கு தெரியாதா"

"புள்ளதாச்சிக்கு ஒத்தாசையா இருக்கட்டுமேன்னு கேட்டா பிகு பன்றயே..."

"ஒத்தாசைக்கு வந்தவள கொளுந்தியானு பாக்காம கூப்பிட்ட ஆளுதான"

"ஆமாமா ரெண்டு பேரும் ரம்பா ஊர்வசின்னு நெனப்பு"

"இல்லைனாலு உங்க பவுசு தெரியாதாக்கும்... வாத்தியார்னுதான்.. பள்ளிக்கூட பிள்ளைகள பாக்குறதே சரியில்ல"..

"நிறுத்துடி.. நீ யோக்கிமாக்கும் ஊர்மேயத்தான நீ டிரான்ஸ்பர்ல போன.."

"இதப்பாருங்க இப்படி அசிங்கமா பேசாதிங்க.. என்னோட யோக்கியத என்னானு எனக்கு தெரியும்.. எல்லாம் உங்க மாதிரியில்ல.."

"நல்லாத்தான் தெரியுது.. மூத்தவளுக்கு உஞ்சாடையாப் போச்சு,, ஆம்பளயா பொறக்கட்டும் எவன் மூஞ்சின்னு அப்பல்ல தெரியும்.."

"................."

"என்னடி பதிலக் காணம்"

அகங்காரத்தாலும் ஆற்றாமையாலும் கோபத்தாலும் குரூரத்தாலும் ஆன ஒன்னரைப்படி சொற்கள் தெருவில் சிதறத்தொடங்கின.

*உரையாடல் 2*

"ஏன்டா.. உப்புத்தொர பூசாரி ரெண்டாவதாவும் மகராணிதான் பொறக்கும்னு சூடத்த ஆத்துறான் என்னடா செய்றது.."

"என்னத்த செய்யச் சொல்ற.."

"முத்துத்தேவன்பட்டி வைத்தியச்சிக்கு டிமாண்டாம்டா.. இப்பவே சொல்லி வைடா.. ரூளப் பாத்து.."

"ஏம்மா.. உனக்கு அறிவே கெடையாதா... எத.. எத.. எப்ப பேசனும்னு..."

“உம்பொண்டாட்டிக்கு வக்காலத்து வாங்குற.. எங்க அவ.. அடுப்படியில ஒக்காந்து ஒட்டு கேக்குறாளா..."
"சும்மா இருக்க மாட்டியா நீயி.."
"......................."
"......................."
"......................"
தேள்களும் பெருச்சாலிகளும் தின்றது போக தெருக்களில் ஓடத்தொடங்கின வீச்சமெடுத்த சொற்கள்.

*உரையாடல் 3*
"*அப்பா நான் சந்திராப்பா*"
".........................."
"*முடியலப்பா..*"
"........................."
"*பாத்துட்டேன்.. ஒன்னுமே செய்ய முடியல...*"
"........................."
*எல்லா வழியிலயும் பாத்துட்டேன்..முடி..*
".........................."
"*அப்பாகிட்ட அதான் சொன்னேம்மா...முடியலம்மா...*"
".........................."
"*காசு சரியாப்போச்சும்மா... முடியலம்மா.. வெக்கிறேன்...*"

*உரையாடல் 4*
"........................................................................"
*சந்திரா பேசிய பேச்சுக்கள் அவளைச் சுற்றியிருந்த யாருக்கும் விளங்காத வெறும் ஒலிகளாய் மட்டுமே இருந்ததால் அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் காற்றின் மேல் மிதக்க விட்டார்கள். காற்று மெல்ல தள்ளாடியவாறு கனமான அவ்வார்த்தைகளை பலவகை மரக்கிளைகளில் தலைகீழாக தொங்க விட்டுச்சென்றன.*

*சந்திராவைச் சுற்றி இருந்தவர்கள்:*
*சுவர்கள், பலா மரத்தாலான அலமாறி, சில காட்டன் துணிகள், துரு பிடித்த சன்னல் கம்பிகள், சிங்கார் சாந்து பொட்டு, ஜிமிக்கிகள், கண்ணாடி வளையல்கள், வளையல்கள், முடிக்கற்றை நிரம்பிய சீப்பு, சில கரப்பான்கள், பல்லிகள், அழுக்கு பெட்டியைச் சுற்றி கொசுக்கள், ஈர நாமல் வீசும் கழிப்பறை வாசனை, தட தட வென்று சுற்றும் மின் விசிறி, சில பெருமூச்சுகள், புழுக்கம் மற்றும் சில சென்சார் செய்யப்பட்ட பொருட்கள்.. எக்சட்ரா.. னுக்சட்ரா.*

*காட்சி 2*
*சாட்சி*
வேப்ப மரங்கள், பெரிய கான்கிரீட் கட்டிடங்கள், நாய்கள் நுழையக்கூடிய அளவு பெரிய சன்னல்கள், நீண்ட தகரத்தாலான கட்டில்கள், அவற்றில் போடப்பட்டிருந்த கரும் மற்றும் வெளிர் பச்சை நிற விரிப்புகள், ரொட்டித்துண்டுகள், பால் வாசனை, பீடி வாசனை, அழுகுரல்கள், பெண்கள், இரத்த ஒழுக்கு வாசனை, டிஞ்கர், பார்மால்டிஹைட், இரத்தம், சிதைந்த கருக்கள், ஈக்கள், ஆண்கள் மற்றும் தூணிலும் துரும்பிலும் இருக்கும் மரணம்.

உரையாடல் 5

"எவ்வளவுதான்யா வேணும்"
"அறனூறு கொடுங்க சார்"
".................."
"......................"
"............................."
"................................"
"டாஷ்மாக் விலைய கூட்டிட்டாங்க சார்..."
இவ்வுரையாடல் மனித செவிகளுக்கு சலித்துப் போனவை. புளித்த வாசனை.

உரையாடல் 6

"detail post mortem தேவையில்ல சார்.."
"clean burnt injuries... cause of the death clean... ஆ.. இருக்கு.."
"விசரா எடுத்துடுங்க டாக்டர்..”



“எதுக்கு.."
"கேப்பானுக சார்.. தனியா ரெக்கொசிசன் தரணுமா.."
"தேவையில்ல.. எடுத்துடலாம்.."
"தேங்ஸ் சார்.."
"எட்டு மாச பேபி ஒன்னு இருக்கு ஸ்பெசிமனுக்கு எடுத்துக்கவா.."
"ஏதும் பிரச்சனை வராதில்ல.."
"பார்மாலிட்டீஸ் எதுவும் இல்ல பட் அவங்களுக்கு என்ன தெரியவா போது.."
"எடுத்துக்கலாம் சார் பி எம் முடிஞ்சதா.."
"panel வேண்டியது இல்ல...but.. கல்யாணம் ஆகி 5 வருசம்தான் ஆச்சு.."
"RDO enauiry sir..."
"எதுக்காக பண்ணிகிட்டாளாம்.."
"usual reason....stomach pain.."
"ஹ..ஹ..ஹா...பி எம் முடிஞ்சதும் பியூன் பார்சல் பண்ணிடுவான் கையெழுத்த போட்டு வாங்கிக்கிட்டு போக சொல்லுங்க.."
"சரிங்க சார்..."

சில கேள்விகள்

பேர் விலாசம் என்ன. முதல்ல பொணத்த யார் பாத்தது. கடைசியா உசிரோட யார் பாத்தது. புருசனுக்கு ஒரே பொண்டாட்டியா. காது குத்தியிருக்கா. எந்தப்பக்கம் கெடந்துச்சு. இன்சூரன்ஸ் பண்ணியிருக்காங்களா. பஞ்சாயத்து ஆளுக எங்க.பாத்தவங்க யார் கையெழுத்து போடுவா. எந்த சுடுகாடு. சொன்னத வாங்கிட்டு வந்தாச்சா.
குஷ்டம் பிடித்த சொற்கள் ஈக்களுக்கு இரையாகி கழிவுகளாய் சாக்கடைகளில் மிதக்கின்றன.

*காட்சி 3*
*சாட்சி*

செழுமையாக ஒழுக்கமற்று கட்டப்பட்ட பெரிய கட்டிடம், பல அறைகள், மரத்தாலான நாற்காலிகள், வயர்கள், மரங்களை வெட்டி கூலாங்கற்களால் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான காகிதங்கள், குப்பைத் தொட்டிகள், வழுக்கைத் தலை மனிதர்கள், திருவுருவப் படங்கள், பெரிய குளிர் பதன அறை, கண்ணாடி சன்னல்கள், திரைச்சீலைகள், அக்குவாபினா பாட்டில்கள், கப் அன்ட் சாசர், ஆணைகள்.

உரையாடல் 7

"அடுத்த மீட்டிங் செட்டியூல் என்ன"
"பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பத்தினது சார்”
"யார் வந்திருக்கா"
"கவுன்சலிங் டீம்.. ஹெல்ப் லைன்..டிஎஸ்பி..."
"வெல் அவங்கள கொஞ்சம் வெயிட் பண்ண சொல்லுங்க.. நாம கலால முடிச்சுடலாம்.."
"ஏசி எக்சைஸ்.."
"எஸ் சார்.."
"இந்த மாசம் ஆப் டேக் எப்படி.."
"கேஸ் எதுவும் இருக்கா.."
"27 சார்.. ஆல் ஆர் மைனர் இன் நேச்சர் சார்.."
"குட்.. ட்ரை டு கீப் ரைஸ் த ஆப் டேக் ஓக்கே..மீட்டிங் மே பி வைண்ட் அப்.. சிராஸ்தார் அவங்கள வரச்சொல்லுங்க.."
"வெல்கம்.. இந்த மாசம் என்ன விசேசம்.."
ஒன்னுமில்லை சார்.. சூசைட் ரேட் தான் கொஞ்சம் அதிகமாயிருக்கு சார்
"எல்லாமே பெண்களா.."
"இல்ல சார்.. 31.12 வரைக்கும் 94 பெண்கள்.. 53 ஆண்கள் சார்.."
"இது என்ன பெண்களுக்கு எதிரான குற்றங்கள்ல வருதா..”

"இல்ல சார் பட் கவுன்சலிங் பண்றவங்கங்கற முறையில நாங்க உங்ககிட்ட சொல்லுயாகனும்.."
"இதுக்குன்னு தனி மீட்டில் இருக்குல்ல அப்ப பாத்துடலாம்.."
"எஸ் சார்.. பட்..."
"சரி சொல்லுங்க மெயின் காரணம் என்ன.."
"எல்லாம் வயித்து வலிதான் சார்.."
"எத்தன பேருக்கு அப்படி.."
"செத்தவங்க 147 பேர்ல 107 பேர் சார்... வயித்து வலியால மனம் வெறுத்து தற்கொல பண்ணிக்கிட்டதா போலீஸ் சொல்லுது சார்.."

"நாங்க சொல்லை சார் புகார்ல அப்படித்தான் சொல்றாங்க நாங்க என்ன செய்றது சார்.."
............
..................
......................
"வருசா வருசம் சூசைட் ரேட் அதிகமாயிட்டு இருக்கு. பாப்புலேசன் அதிகமாகுதில்ல. சிரிக்க முடியாது. டீ அரேன்ஞ்ச் பண்ணுங்க'.

வெள்ளைச் சட்டை போட்ட சொற்கள் கழிப்பறை குழாய்கள் வழியாக நகரைக் கடக்கின்றன. சொற்களை உண்டு கொழுக்கின்றன யூன்றிகள்.

காட்சி 4

சாட்சி

கடவுள் என்கிற நிகழ்வுப்போக்கு. இயற்கை என்கிற அர்த்தத்தில் வருகிற அனைத்து பொருள்களும். ஏதார்த்தம் என்கிற முட்டாள்தனம். மலட்டுத்தனத்தை மனித வெளியெங்கும் விதைத்த பிரத்தியேகமான ஒரு மனித குழுமனம். குடித்துசெழித்து

துடைத்து அலையும் அறிவு வாடை வீசும் எழுத்தாளர் பிணம். நான்.அவர் அவரவர் ஊர்களில் இருக்கும் சுடு மற்றும் இடு காடு.

உரையாடல் 8

கேட்பதற்கு யாரும் இல்லாததால் சொல்லப்படவில்லை.

சந்திராவின் மகளை சந்திராவின் தாய் அழைக்க வந்தபோது அவள் தெருக்களில்சிதறிக் கிடந்த மல்லிகைகளை பொறுக்கிக் கொண்டிருந்தாள். ஆச்சர்யப்படும்படியாக தெருமுழுவதும் மல்லிகை மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

நீண்ட சாலைகள் இருக்கின்றன. நீண்ட தெருக்களும் கூட. தேவையற்றவை தேவையானவை எல்லாம் நீண்டு கிடக்கின்றன. சவ ஊர்வலங்கள் குறையத் தொடங்கி விட்டதால் காக்கை பித்ருக்கள் கவலை கொண்டு கரைந்தலைகின்றன. சொற்கள் தொடர்ந்து பிறந்து பரவிக் கொண்டிருக்கின்றன. சப்தத்தினால் ஆன சொற்கள் சில மீட்டர்கள் பயணம் செய்கின்றன. காகிதங்களின் மீதும் விஞ்ஞான உபகரனங்களின் மீதும் அறையப்பட்ட சொற்கள் சில கிலோ மீட்டர்கள் பயணம் செய்கின்றன. பின்னர் ஏதோ ஒரு மர்மப் புள்ளியில் மரணித்து வீழ்கின்றன. மரணம்.

சுபம்.



# பயணங்கள்

சாந்தா தத்


ஓவியம் : தூரிகா

கண்முன் கடலாய் விரிந்திருந்த பசுமையும் குளுமையும் கணப்பொழுதில் வறட்சியும் வெப்பமுமாய் மாறிவிட்டாற்போலிருந்தது யாதகிரி சொன்ன அந்த ஒற்றை வாக்கியத்தைக் கேட்டபோது. ஒரே ஒரு வரி ஓராயிரம் அணுகுண்டுகளைத் தன்னுள் பொதித்திருப்பது போன்ற பிரம்மாண்டமான பீதி உடலையும் உணர்வுகளையும் தாக்க... கலவரமாய் மஞ்சுளாவைப் பார்த்தேன். அவள் விழிகளிலும் அதே மிரட்சி. நானாவது பிறந்தது முதல் ஹைதராபாத் வாசம். நக்ஸலைட்டுகள் குறித்து ஓரளவு தெரியும். தமிழ்நாட்டுத் தலைநகரில் திருமணமாகும் வரை காலம் கழித்தவள்... கொஞ்சம் அரசல் புரசலாய்க் கேள்விப்பட்டிருப்பதும் இவளுக்கு மிகையாகத்தான் மனதில் பதிவாகியிருக்கும்.

இதோ இந்தத் தோப்பைத்தாண்டி பெரிய மலை தெரியுதில்லே... அங்கதான் நக்ஸலைட்டுகள் தங்குவாங்க..." ஒரு தகவல் போல் தெலுங்கில் யாதகிரி சொன்ன அந்த ஒன்லைன் ஸ்டேட்மெண்ட் இதுதான். ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்கிறான், இவனுக்கென்ன தெரியும் என அலட்சியமாய் உதடு சுழிக்க முடியாது. பல வருடங்களாய் இப்பிரதேசங்களில் வாடகைக் காரோட்டியாய் வாழ்க்கையை ஓட்டுபவராயிற்றே?

அச்சாலையின் இரு மருங்கும் சல்யூட்டுடன் அணிவகுத்து நிற்கும் இராணுவக் கம்பீரத்துடனான விண்முட்டும் விருட்சங்கள்... குன்றுகள்... சின்ன சின்ன ஓடைகள்... பசேரென்ற வயற்பரப்புகள்... ஒட்டினாற் அடர்ந்த மாந்தோப்பு! முன் மாலைப் பொழுது நெருங்கிக் கொண்டிருப்பதால் வெய்யில் பழுத்து இளம் குளிர்த்திவலைகள். காரிலிருந்து இறங்கி அந்த அழகான சூழலிடை மஞ்சுளாவின் கைகோர்த்தபடி அத்தோப்பினுள் காலாற நடக்கவேண்டுமென்று ஒரு விழைவு வந்திருந்தது. யாதகிரி கூறியதைக் கேட்ட பின் அதற்கு நிச்சயம் ஒப்புக் கொள்ளமாட்டாள் மஞ்சு. எனக்கும் இப்போது அந்த ஆசை அகன்றுவிட்டிருந்தது. எதற்கு தேவையற்ற ரிஸ்க் எல்லாம்?

"ரிசார்ட்டுக்குத் திரும்பிடலாம் யாதகிரி..." "ஏன் சார்... போகப் போக இன்னும் அழகா இருக்கும்...

"அதான் காலையிலிருந்து நிறையப் பார்த்துட்டமே. போதும்பா..." நான் சொன்னபோது ஆமோதிப்பாய் என்னைப் பார்த்தாள் மஞ்சு. மேற்கொண்டு வாதம் செய்யாமல் வண்டியைத் திருப்பினார் டிரைவர்.

" உன்னை கிட்நாப் செய்துருவாங்களோன்னு பயம்மா இருக்கா மஞ்சு?"

" அவங்களுக்கு வேண்டியது பொண்ணுங்க இல்ல. அவங்க நோக்கமே வேற இல்லயா? ஒரு வேளை உங்களைக் கடத்தினா கடத்துவாங்க..."

"என்னையா?"

"மறந்துட்டிங்களா. மூணுவாரம் முன்ன இங்க பக்கத்துல இருக்கற ஒரிஸ்ஸா பார்டர்லதானே உங்களைப்போல் ஒரு இஞ்ஜினியரையும் கூட இருந்த ரெண்டு மூணு பேரையும் கடத்திட்டுப் போய்ட்டாங்க. பின்னால் நிறைய கண்டிஷன் போட்டுத்தானே அவர்களை விட்டாங்க..."

"அப்படின்னா ... நெருப்பு கண்டம் தண்ணி கண்டம் போல் இஞ்ஜினியரா இருக்கறவங்களுக்கெல்லாம் நக்ஸலைட் கண்டம்னு முடிவே பண்ணிட்டயா?" என் சீண்டலும் அவள் முறைப்புமாய்... அப்போதைக்கு கடத்தல் அம்சம் பின் தள்ளப்பட்டது.

நாங்கள் தங்கியிருந்த விடுதியை அடைந்தபோது ஆறு மணிகூட ஆகியிருக்க வில்லையெனினும் நன்கு இருட்டிவிட்டது. மலைப் பிரதேசமல்லவா? சமீப நாட்களாகவே அருகிலுள்ள ஸ்ரீகாக்குளம் பகுதியில் நக்ஸலைட் பயம் கொஞ்சம் அதிகமாகவே தலைதூக்கியுள்ளது. போதாக்குறைக்கு இஞ்ஜினியர் குழு கடத்தப்பட்டது கூடச் சேர்ந்துகொண்டது. புதிய புரளியோ என்னவோ... ரிசார்ட் ரெஸ்டாரண்டில் காப்பி குடித்தபோதுகூட இந்தியிலும் தெலுங்கிலும் ஆங்கிலத்திலுமாய் அச்சப்பட்டனர் சக உல்லாசப் பயணிகள் கூட?

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. எத்தனை ரிசார்ட்ஸ்? எவ்வளவு பேர் தங்கியிருக்காங்க.. சுத்தி எவ்வளவு செக்யூரிடி... இங்கல்லாம் அவங்க வரமாட்டாங்க... காட்டுப்பகுதி மலைப்பகுதின்னு ரொம்ப உள்ள போனாத்தான் ஆபத்து.."

"பொது மக்களைத் துன்புறுத்தமாட்டாங்க அவங்க. நெஞ்சில் ஈரமிருக்கறவங்கதான். ஏதோ வாழ்க்கை... பிரச்சனைனு அவங்க இப்படி..."

அதான் கவர்ண்மெண்ட் அவங்க முன் வைத்த கண்டிஷனுக்கெல்லாம் ஒப்புக்கொண்டாகிவிட்டதே. இன்னும் எதுக்கு பயம்..."

இத்தினுசில் "காபி இன் அரக் வேலி ரெஸ்டாரண்ட்" நிகழ்வு அமையப்பெற்றது.

இத்தனையும் மீறி மனதில் ஒரு குறுகுறுப்பு. விளையாட்டாய் அல்லது விபரீதமாய் ஒரு ஆசை முளையிட்டது என்னுள். நக்ஸலைட்டுகள் குறித்து நிறையப் படித்திருக்கிறேன்... கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்கள் உரையாடுவது... உடையணிவது... உண்பது.. இதெல்லாம் எப்படி இருக்கும்? தோற்றத்தில் முரட்டுத்தனம் தென்படுமா? ஏ.கே. ஃபாக்ட்டிஸெவன் என்கிறார்களே, எந்நேரமும் அதைத் தோளில் மாட்டிக்கொண்டிருப்பார்களா...? பார்ப்பதற்கு சாதாரணத் துப்பாக்கிபோல் இருக்குமா இல்லை வேற மாதிரியா...? ஒருவரையாவது பார்க்கக் கிடைத்தால்... பார்க்க வேண்டும்.

இதெல்லாம் மஞ்சுவிடம் சொன்னபோது அவள் பார்வையில் தெரிந்தது வியப்பா கிண்டலா என இனம் காணமுடியவில்லை.

அசாதாரண அழகு மிகுந்த அமைதியான குளுமையான... ஆந்திராவின் ஊட்டி எனப்படும் அரக்குப் பள்ளத்தாக்கிற்கு (கிக்ஷீணீளீ ஸ்ணீறீறீமீஹ்) வர வேண்டுமெனும் நீண்ட நாள் கோரிக்கை இப்போது நிறைவேறியுள்ளது... ஒரு சிறு சலனத்துடன் தனித் தெலுங்கானாப் போராட்டம், மறியல், பந்த்... ராஸ்தா ரோகோ... ரயில் ரோகோ என வருடமெல்லாம் அவஸ்தைப்பட்டு ஆசுவாசமாய் இங்கு வந்தால் இங்கும் வேறு மக்களின் வேறு பிரச்சனைகள்..?

ஆந்திர டூரிஸம் தம் விருந்தினர்களுக்காக அன்றிரவு ரிசார்ட்ஸ் முன்னிருந்த மைதானத்தில் ஒரு கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தது. உள்ளூர் கலைஞர்கள் நடத்தும் செஞ்சுலட்சுமி தெருக் கூத்து. ஸ்த்ரீபார்ட் ஆண்கள் பாட்டும் ஆட்டமுமாய் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தார்கள். கண்களில் கூலிங் கிளாசுடன் நரசிம்மசுவாமி ரங்கப் பிரவேசம் செய்தாக. செஞ்சுலட்சுமியும் ஆதிலட்சுமியும் சுவாமியுடன் செய்தல் ஊடல் கூடல் காதல் கலகம் சரசம் சாகசம் என மிகச் சுவாரசியமாகச் சென்றதால் நேரம் கழிவதை எவரும் உணரவில்லை. நள்ளிரவு மூன்று மணிநெருங்கியும் யாரும் தூங்கிவிழவில்லை.

"அந்தக் காலத்தில் இதுக்கெல்லாம் சட்டம் இல்லே. அதனால்தான் எல்லாச் சாமிகளும் ரெண்டு பெண்டாட்டின்னு..."

"அதெல்லாம் இருக்கட்டும். இப்படி நேரம்கெட்ட நேரத்துல வெட்ட வெளியில் உட்கார்ந்து கூத்து பார்த்திட்டிருக்குமே. திடீர்னு நக்ஸலைட் முன்ன வந்து நின்னா...? அவங்க இந்தக் கூத்தை ரசிப்பாங்களா...?

ஏதேதோ உளறினாள் மஞ்சுளா. கூத்து ஒருவாறு முடிந்து ஊர் உலகம் விழித்துக் கொள்ளும் வேளையில் நாங்கள் உறங்கச் சென்றதால் எழுந்திருக்கும்போது மணி எட்டரை தாண்டிவிட்டிருந்தது. மாலை ஐந்து மணிக்கு விசாகப்பட்டிணத்தில் எங்கள் டிரெயின். இங்கிருந்து நூற்று முப்பது கிலோமீட்டர். அதற்குள் இங்கும் போகும் வழியிலும் பார்க்க நிறைய இடங்கள் பட்டியலில் இருந்தன.

எல்லாம் முடித்துக் கொண்டு கொள்ளை அழகான இந்த அரக்கு வேலிக்குக் கண்டிப்பாய் மீண்டும் வரவேண்டுமென நினைத்துக் கொண்டு சிம்மாசலம் நோக்கிப் பயணப்பட்டோம். மரங்களும் மலைகளும் மட்டுமே நிறைந்து மனித சஞ்சாரமே அற்ற சாலையில் விரையும் கார்களில் ஒன்றாக எங்கள் கார்...

"ரோடெல்லாம் இவ்வளவு வெறிச்சோடிக் கிடக்கே. நக்ஸ்லைட் கூடப்பயப்படுவாங்க. இந்த வழியாய்ப் போக..."

"நீ வேற. அவங்களுக்குப் பயப்படல்லாம் தெரியாது. பயமுறுத்தத்தான் தெரியும். அது சரி மஞ்சு. சும்மா ஒரு கற்பனை. ஒரு வேளை அவர்களில் ஒருத்தர் இந்த டிரைவர் கெட் அப்பில்..

"ஐயே... கற்பனைன்னா கூட இவ்வளவு ஓவரா? அழகாய் முகம் சுளித்தபடி என் தோளைத்தட்டினாள் அவள். "சரி... நல்லதாய் போச்சு. பார்க்கணும்னு ஆசைப்பட்டீங்களே..".



திடீரென ஒரு சந்தேகம். "உங்களுக்கு தமிழ் புரியுமா யாதகிரி? தமிழிலேயே கேட்டேன்.

என்ன சொல்றீங்க சார் என்பதுபோல் ஏகக் குழப்பத்துடன் யாதகிரி என்னைப்பார்க்க... இது சினிமாவா என்ன என்று நினைத்தபடி காலையிலிருந்து ஓடிய ஓட்டத்தில் பிரித்துக்கூடப் பார்க்காத செய்தித்தாளைப் புரட்ட...

மூன்றாம் பக்கத்தில் ஒரு செய்தி எப்போதோ ஒரு முறை அறியக் கிடைக்கும் செய்தி ...

முன் தினம் என்கவுண்டரில் மடிந்ததாய் ஒரு குழுத்தலைவனின் புகைப்படத்துடன்...

இனம் தெரியா ஒரு குழப்பத்துடன் சந்தேகமாய் உற்றுப்பார்த்தேன். மல்லாந்து கிடந்தவன், நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோது படிப்பை முடித்து பல வருடங்களாகியும் வேலை கிடைக்காத விரக்தியும் வீட்டின் பழிச்சொற்களும் வீட்டை விட்டு விரட்ட... எவ்வளவு தேடியும் கிடைக்காத என் அண்ணன் போல்... போல் அல்லா... அண்ணனேதான். பார்க்கப்பார்க்க உறுதியாகிவிட்டது.

"... என்னை அழவிட்டு ஓடிப் போனானே கட்டைல போறவன், உங்க நாலு பேரில் அவன் ஒருத்தன்தான் அச்சு அசலா என் அண்ணன் சாயலில் இருப்பான்னு உறவுக்காரங்கல்லாம் சொல்வாங்கடா. ஊர்ல உலகத்துல பெத்தவங்க பிள்ளைங்களைத் திட்ட மாட்டாங்களாடா. இப்படிக் கண்காணாமப் போய்ட்டானே..." ஞாபகம் வரும்போதெல்லாம் அம்மா புலம்புவாள். என் மாமாவின் முகம் அப்படியே என் கண்முன் ...

பேப்பரை சீட்டில் வைத்தேன்.

"என்ன ... வச்சிட்டீங்க. அவ்வளவு ஆசைப்பட்டீங்களே. ஆசைதீரப்பார்க்கிறது ..."

"வேண்டாம் மஞ்சு. இப்ப அந்த ஆசை இல்லே..."
"ஆமாங்க பாவமா இருக்கு இல்ல. யார் பெத்த பிள்ளையோ ...? ஆதங்கப்பட்டாள் மஞ்சுளா.

---

**கவிதை :**
**அதங்கோடு அனிஷ்குமார்**

## மீதமிருக்கும் நாட்கள்

சொல்ல முற்பட்டு
வெளியேறத் துடிக்கும்
வார்த்தையொன்று
எச்சிலுக்குள் மூழ்கிப்போவது போல்
கனத்த மௌனம்
பெருஞ்சுமையென
அடிமனதை அழுத்துகிறது
ஒவ்வொரு மரணம் நிகழும்பொழுதும்.

வெளியெங்கிலும்
வியாபித்தலையும்
வெறுமை
உள்ளுக்குள் இறங்கி
உயிர் குடையும்

விரட்ட எத்தனிக்கும்
ஒவ்வொரு பொழுதும்
உக்கிரம் தரிக்கும்
வெறுமை

கூடும் முகங்கள் ஒவ்வொன்றின்
மன வெளிகளிலும்
கடந்த மனிதனின்
கடந்த நாட்கள்
காட்சியாய் நீளும்

சொல்வதற்கோ
சொல்லிப் பார்ப்பதற்கோ
அச்சம் தரும்
மீதமிருக்கும் நாட்கள்

காலச்சங்கிலி பிடித்து
நடக்கத்தான் வேண்டும்
அந்திமப் பொழுதின்
அஸ்தமன ரேகைகள்
நம்மேல் படரும் வரை



ஓவியம் : மார்ட்டின்

திரைப்படக்கலை :

## வி.கே. ஜோசப் (மூலம்)

## தமிழில் : டாக்டர். இரகுராம்



ஓவியம் : அருணகிரி

திரையரங்கத்தின் இருட்டில் நாம் கட்டுண்டு விடுகிறோம் எனலாம். லௌகீக வேலைகளிலிருந்தும் அன்றாட அலுவல்களிலிருந்தும் சிறிது நேரத்திற்கு நம்மைத் தள்ளி வைக்கிறது சினிமா. இந்த இருளில் நாம் தெரிந்து வைத்த அல்லது இனம் தெரிந்து கொள்ளாத ஒன்றுக்காக சாட்சியாக மாறுகிறோம். வேறு எந்த ஒரு கலைவடிவ ரசனையிலிருந்தும் வித்தியாசமாக இங்கு என்ன நடக்கிறது என்றால். இங்கே இருள் நம்மை வெளியுலகத்திலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்துகிறது என்பதே. அரங்கத்திலுள்ள திரையில் புதிய வாழ்க்கை மற்றும் புதிய சூழல் ஆகியவை பளிச்சென்று வெளிப்படும்போது நாம் நம் நிஜ வாழ்க்கையிலிருந்து சிறிது நேரம் இடம் மாற்றி நட்டுவைக்கப்படுகிறோம். இந்த மாற்றத்துக்கிடையிலும் சினிமாவின் காட்சிகள் நம் நிஜ வாழ்க்கைக்கு ஒரு பாலம் அமைக்க முயல்கிறது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகச் சூழலின் சம்பவங்களுக்குள் அல்லது வாழ்வின் சந்தர்ப்ப சூழ்நிலைக்குள் நம்மை எட்டிப்பார்க்க கட்டாயப்படுத்துகிறது. நம் கண்களின் முன் விரியும் புது உலகத்தை நாம் வெளியிலிருந்து பார்வையிடுகிறோம். சிறிது நேரத்துக்கு முன்னர் வரை நாம் பங்கு கொண்ட வாழ்க்கையும் நம்முன் விரிவடையும்போது நாதம் பார்வையாளராக மாறுகின்றோம். இப்படியொரு தள்ளி நிற்கும் நிலைமையால் நாம் நிஜத்துக்கும் நிழலுக்குமிடையில் ஊசலாடுகிறோம். இதற்கிடையில் நம் வாழ்க்கையையும், ஏன் நம்மையே கூட ஒரு புதிய அர்த்தத்துடன் பார்வையிடக் கட்டாயப்படுத்தப்படுகிறோம்.

சினிமாவில் சித்தரிக்கப்படும் வாழ்க்கை ஒருபோதும் நிஜவாழ்க்கையின் நகலாவதில்லை. சினிமாவுக்கும் எதார்த்தத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பற்றி உணர்ந்தவனாகவே இருப்பான் பார்வையாளன். எதார்த்தத்துக்கும் எதார்த்தமின்மைக்குமிடையே சினிமா ஊசலாடிக் கொண்டிருக்கிறது. சம்பவங்களுக்கு சாட்சியாவது போன்ற அனுபவம், அல்லது அப்பாற்பட்ட ஒரு பிரமையைத் தான் சினிமா உருவாக்குகிறது, எதார்த்தத்திலிருந்து மிகவும் விலகி நிற்கும் சம்பவங்களைச் சித்தரிக்கும் சினிமாக்களில் கூட இந்த அனுபவம் நம்மை பாதிப்பதன் காரணம் என்ன? மற்ற எந்தக் கலை வடிவத்தாலும் முடியாத, இடம் காலம் போன்றவையை மீறுகின்ற அசைவுத் தன்மையின் (காட்சிகளாகவும் காட்சிகளுக்குள்ளேயும்) காரணமாக நிஜவாழ்க்கையின் பிரமையை சினிமா நமக்கு அளிப்பதால்தான் என்று பதில் கூற முடியும். சினிமா நமக்கு அளிப்பதால்தான் என்று பதில் கூற முடியும். சினிமா நிஜத்தையோ நடந்த சம்பவங்களையோ காட்சியாக மாற்றும்போதும், புதிதாகக் காட்சிகளை உருவாக்கும்போதும் கூட நாம் முற்றிலும் நிஜத்தை வந்தடைவதில்லை. நிஜவாழ்வில் நடக்கும் ஒரு சம்பவத்தை நேரடியாகக் கண்டு நாம் சாட்சியாவது போல படம் பார்க்கும்போது நடப்பதில்லை. சம்பவத்தின் காட்சியைப் படம் பிடிக்கவோ, புதிதாக உருவாக்கவோ செய்யும் இயக்குநரின் பார்வை வழியாக, அவர் எடுத்துக்கொள்ளும் நிலைப்பாட்டின் வழியாகவும் தான் நாம் அதைக் காண்கிறோம். இயக்குநர் அவரது பார்வையின் கோணங்களும் காட்சிகளின் பரிமாணங்களும் எல்லாம் தீர்மானிப்பது அவரது பாணியிலேதான். சொல்லப்போனால் சினிமாவில் நாம் வெறும் பார்வையாளன் மட்டுமே. திரைப்பட இயக்குநரின் கண்ணோட்டமும் நிலைப்பாடுகளும் நம்முடையதை ஒத்துவந்து ஓர் உறவு ஏற்படும்போது தான் பார்வையாளன் அதில் பங்கு கொள்கிறான்.



அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளும் வாழ்க்கையின் நாடகத்தன்மையுள்ள கணங்களும் திரையில் காட்சியளிக்கும்போது நாம் எதார்த்தத்தை நெருங்கி, பின் அடுத்த நொடியே இங்கு காண்பதெல்லாம் நிஜமல்ல என்ற உணர்வில் நிஜமற்ற நிலைக்கு நீங்குகிறோம். இங்கே இந்த நிஜத்தன்மையும் நிஜமின்மையும் சில கொடுத்தல் வாங்கல்களால் நம் மனதில் ஒரு புதிய உணர்வின் பிரகாசத்தைப் பரத்துகிறது. இந்தப் பிரபஞ்சத்தைப் புரிந்து கொள்வதும் நமக்கு ஏற்கனவேயுள்ள கணிப்புகளின், கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் நடக்கிறது. எந்தக் கட்டுப்பாடுகளுமின்றி உலகத்தைப் பார்வையிட நமக்கு சந்தர்ப்பங்களும் சாத்தியக்கூறுகளும் உண்டுதான். எதையும் தேர்ந்தெடுக்க சுதந்திரமும் உண்டு. நமக்கே சொந்தமான முறையில் பார்வையிடவும் பார்வையின் கோணங்களை மாற்றவும் விரும்பிய பொருளிலோ மனிதர்களிலோ சூழ்நிலையிலோ கவனத்தை மையப்படுத்த உரிமையுண்டு. ஆனால் திரையில் விரியும் உலகத்தை நாம் இன்னொருவரின் (இயக்குநரின்) பார்வையில்தான் பார்க்கிறோம். அங்கே நமக்கு தேர்ந்தெடுக்க சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. நம்மால் காணவும் கேட்கவும் முடியும். மற்றவையனைத்தும் நம் மனத்துள் நடக்கிறது. திரையிலுள்ள உலகுக்குள் சென்று சுதந்திரமாகத் தேடவும் பௌதீகமாகக் குறுக்கிடவும் நம்மால் இயலாமல் போகிறது. சாதாரண வாழ்க்கையில் கூீமீணீநீமீ செய்வது போலவோ குறுக்கிடுவதைப் போலவோ சினிமா நம்முன் வைக்கும் உலகத்துக்குள் நம்மால் இயங்க முடியாததால் பார்வையிடுகின்ற செய்கையில் பொறுப்புக்களும் குறைவானதே. எந்த ஒரு பொறுப்பும் இல்லாமல் பங்கு கொள்பவராக இல்லாமல் பலவற்றுக்கும் நாம் சாட்சியாகிறோம். திரையரங்கில் சிரித்து, அழுது, கோபம் கொள்ளவும் செய்ய வைக்கிற வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் நிஜவாழ்வில் நடக்கும்போது பல பார்வையாளர்களும் வேறு விதமாக எதிர் கொள்வது, முன்னர் குறிப்பிட்ட பொறுப்பற்ற நிலைமையினால் தான் எனலாம். நிஜ வாழ்க்கையில் பங்கு கொள்பவராக இருக்கவும் குறுக்கிடவும் நாம் ஏதாவது விலை கொடுக்க வேண்டியிருக்கிறது; தியாகம் புரியவும் வேண்டும். சினிமாவைப் பார்த்து அழவோ ரோஷம் கொள்ளவோ செய்வதால் பார்வையாளனுக்கு எந்தவித நஷ்டமும் உண்டாவதில்லை. மனதளவில் அவன் குறுக்கிடும்போது எந்தத் தியாகமும் செய்யத் தேவையுமில்லை. தனிப்பட்ட முறையில், ரகசியமாக இருளின் மறைவிலிருந்து நாம் எல்லாவற்றையும் பார்வையிடுகிறோம்; யாரும் நம்மை கண்காணிப்பதில்லை என்ற சாதகமான நிலைமையும் நமக்கு உதவியாக இருக்கிறது. நம்மை பத்திரமாக வைத்துக் கொண்டு ஏசாயலரின் தனிப்பட்ட வாழ்க்கை ரகசியங்களுக்குள்ளேயும் நாம் நுழைகிறோம். அந்நியர்களின் படுக்கையறைகளுக்குள் நாம் எந்தத் தடையுமின்றி எட்டிப் பார்க்கிறோம். அங்கே யாரும் நம்மைத் தடுப்பதில்லை. தனிநபரின், மற்றும் சமூகத்தின் பற்பல பிரச்சினைகளுக்குள் சஞ்சாரம் செய்து, பலமுறையும் திரைப்பட இயக்குநரின் நிலைபாட்டுக்குத் தன்னையறியாமல் கட்டுப்படவும் செய்துவிடும் பார்வையாளன் ஒன்றும் செய்ய இயலாதனன் (பிமீறீஜீறீமீஉவ)எனலாம்.

தலைமுறை தலைமுறையாக வளர்ந்து விரிவடைந்து நிலைபெற்ற அர்த்தக்கூறுகள் மற்றும் குறியீடுகளின் உதவியால் திரைப்பட இயக்குநர் தன் படைப்பை நம்முன் திறந்து வைக்கிறான். நாம் அதனை உள்வாங்கிக் கொள்வதும் அதே முறையில்தான். சினிமாவில் பயன்படுத்தும் குறியீடுகளும் பிம்பங்களும் எல்லாம் நமக்குப் பரிச்சயமான உலகத்தைப் பார்த்துப் புரிந்துகொள்ள உதவுகிறது. சாதாரண வாழ்க்கையையும் அதன் பல தளங்களையும் முரண்பாடுகளையும் புரிந்து கொள்ள உதவும் படிமங்களும் குறியீடுகளும் திரையில் மாறி மாறி வருகின்றன. அவை நமது நினைவு மண்டலத்துக்குள் வெளியுலகின் நிரந்தரமான, உயிரோட்டமுள்ள அனுபவங்களாக வந்து சேருகின்றன. பார்வையாளன் திரையில் காணும் படத்திலிருந்து நிஜ உலகத்தைத் தன் சொந்த அறிவினால் விரிவடையச் செய்கிறான். சினிமாவில் வண்ணங்கள் வரத் தொடங்குமுன் "கறுப்பு வெள்ளை சினிமா"வை மக்கள் எப்படிப் பார்த்து ரசித்தனர் என்பதை ஆராய்ந்தால் இவ்வுண்மை புலனாகும். மனிதமுகங்களும் மரங்களும் வானமும் எல்லாம் ஒரே நிறத்தின் (கறுப்பின்) பல ஷேடுகில் (Shade) தான் நாம் கண்ணால் பார்த்தோம். ஆனால் வானத்தை நீலமாகவும் மரங்களின் இலைகளைப் பச்சையாகவும் ரோஜாவை ரோஸ் நிறத்திலும் காணப் பார்வையாளர்கள் பழகிவிட்டிருந்தார்கள். நம் பார்வையின் நிஜத்திலிருந்து வித்தியாசமான வேறொரு நிஜத்துக்கு இயற்கையான இப்படிப்பட்ட ஞானத்தின் வழியாகத்தான் நான் வந்து சேர்கிறோம்.

சினிமாவை ஒரு கலையாக ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஏராளம். சினிமா, எதார்த்தத்தை இயந்திரத்தன்மையுடன் நகலெடுத்து மட்டும் காட்கிறது என்பது அவர்களின் வாதம். வண்ணங்கள் நிறைந்த உலகத்தை கறுப்பு வெள்ளை உலகமாக கேமரா உருமாற்றிவிட்டு, திரையில் Project செய்யப்படும் காட்சிகளின் நேரடி அனுபவம் மார்க்கமாக அந்த வண்ண உலகத்தைப் பார்வையாளன் மீண்டும் திருப்பப் பெற்றுக் கொள்கிறான். திரையிலுள்ள நிஜமற்ற தன்மையை நிஜத்தின் பக்கம் நெருங்க வைப்பது இந்த அனுபவபூர்வமான பரிணாமம் தான். ஷாட்டுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும் இயந்திரத்தன்மையை ஒரு கட்டத்தில் நாம் புறக்கணித்துவிட்டு ஷாட்டுகளின் - காட்சித் துண்டங்களின் தொடர்ச்சியை வாழ்க்கையின் தொடர்ச்சியாகவே நமது அனுபவ மண்டலத்துக்குள் கொண்டு வருகிறோம். திரையில் தெளிந்து வந்து மறையும் காட்சிகளை வெறும் ஷாட்டென்றும் சீன் என்றும் பார்க்காமல் மறைந்து

போகாத வாழ்க்கை சம்பவங்களாக, அனுபவங்களாக நம் மனம் ஒரு சங்கிலித் தொடராக ஒழுங்குபடுத்தி வைக்கிறது. இந்த ஒழுங்குபடுத்தலில் எதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் தன்மையும் நிரந்தரத்தன்மையும் வந்து சேரும்போதுதான் வாழ்க்கையை எதிர்கொள்ளும் முறையாகவோ, ஒரு புரிதலாகவோ, எதிர்ப்புக் குரலாகவோ சினிமா விரிவடைகிறது. அப்படியாக, ஷாட்டுகளும் காட்சிகளும் வாழ்க்கையின் முத்திரைகளைச் சுமந்து வந்து ஒரு பிரத்யேகமான விழிப்பு நிலையை உருவாக்கி முடிவிலா இயக்கத்தில் நம்மைக் கட்டிவைத்தபடியே இந்த ஷாட்டுகளின் இயந்திரத்தன்மையிலிருந்து நம்மை மீட்கவும் செய்கிறது. ஷாட்டுகளை ப்ரேம் (Frame) செய்வதனாலும் காட்சிகளின் கோர்வையினாலும் விரிந்து வளரும் சமூக பிம்பங்களும் குறியீடுகளும் நம்மை தனிப்பட்ட ரசனையின் தளத்திலிருந்து விடுவித்து அசைவற்ற கடந்த காலத்துக்கும் நிகழ்- எதிர்காலங்களுக்கும் இடையில் நடக்கும் அசைவுகளின் சமூகரீதியிலான இருப்புக்கு இட்டுச் செல்கிறது. சினிமாவில் நாம் அனுபவிக்கின்ற இந்த அசைவுத்தன்மை, சரித்திரக் குறியீடுகளின், காலகாலமாகச் சேர்த்து வைத்த ஞானத்தின், சந்தேகங்களின் மறு உருவமாக மாறுகிறது. அப்படியாக, எல்லா மனிதருக்குள்ளும் விரிவடைந்துள்ள பிரபஞ்ச ஞானத்தை ஒட்டி நிற்கின்ற கடிகார அசைவு, சினிமாவின் அசைவுடன் ஒன்று சேர்கிறது.

திரையில் விரிந்து வரும் பிம்பங்களினூடே, காட்சிகளின் கோர்வையால் நாம் ஒருவேளை நமது வாழ்க்கையின் நிஜத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ செய்யலாம். அல்லது காட்சிகள் ஏற்படுத்தும் தாக்கத்தால் இது நிஜமல்ல என்ற எண்ணத்தை மறுப்புக்கும் அடிப்படையாக அமைவது என்னவென்றால் பௌதிகமான நிஜங்களே. நம்மைப் பற்றியும் நாம் வாழும் பிரபஞ்சத்தைப் பற்றியும் நம் சுயநினைவுள்ள மனம் உருவாக்கிய கருத்துக்கள் அவையுடன் இணைந்திருக்கிறது. நமது நினைவு மண்டலத்திலும் செயல்களிலும் பௌதிகமான மாற்றத்தை உண்டுபண்ணும் அலைகள் நிலைக்காமல் அடித்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் பேரலையின் தாக்கம் மனிதனின் அகநிலை, மற்றும் புறநிலையின் முன்னேற்றத்துடன் தொடர்பு கொண்ட அரசியல் ரீதியிரான, கலாச்சாரம் சம்பந்தப்பட்ட விஞ்ஞான பூர்வமான, மதம் சம்பந்தப்பட்ட செயல்களுடனும் எதிர்வினைகளுடனும் கட்டுண்டு கிடக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நிஜத்துக்கும் நிஜமின்மைக்குமிடையிலும் நிஜத்துக்கும் வேறொரு நிஜத்துக்கும் இடையிலும் சில போராட்டங்களும் முரண்பாடுகளும் உருவாகின்றன. உதாரணமாக அடூர் கோபாலகிருஷ்ணனின் 'முகாமுகம்' என்ற படத்தை எடுத்துக் கொள்வோம். திரைப்பட இயக்குநரின் கருத்துக்கும் கண்ணோட்டத்துக்கும் ஏற்றபடி உருவாக்கப்பட்ட கருவை விரிவாக்கும் உத்தியில் உண்மைக்குப் புறம்பான சில விஷயங்கள் நுழைந்துவிட்டன. சரித்திரபூர்வமான பிற்போக்கும் முன்கணிப்புக்களும் காணப்பட்டன. அவை நிஜத்திலிருந்து வேறுபட்டு நிற்கிறது. சரித்திரத்தின் உண்மை நிலையிலிருந்து வேறுபட்ட முறையில் உருவாக்கப்பட்ட கம்யூனிஸ்ட் சரித்திரம் நமது எதார்த்த சரித்திர ஞானத்துக்கு சவால் விடுகிறது. அதே நேரத்தில் 'முகாமுகம்' என்ற படமும் அதன் காட்சியமைப்பும் ஒரு நிஜம்தான். அந்த நிஜம் சரித்திரபரமான நிஜத்துடன் மோதுகிறது. அந்த இரு நிஜங்களுக்கிடையில் முரண்பாடும் இருக்கிறது. யூல சந்தர்ப்பங்களில் திரைப்படத்துக்குள்ளேயே முரண்பாடும் இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் திரைப்படத்துக்குள்ளேயே கட்டமைப்பு ரீதியில் நிஜமும் நிஜமின்மையும் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கிறது. 'முகாமுகம்' படத்தில் வரும் கம்யூனிஸ்ட் தலைவரின் நீண்ட தூக்கம் இயற்கைத்தன்மையை விட்டு எதார்த்தமற்ற நிலையில் நிற்கிறது. அந்த நீண்ட தூக்க நிலை நிஜத்திலிருந்து வேறுபட்டு, நமது ரசனைக்கும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டு, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீது சாற்றப்படும் செயலற்ற தன்மையின் குறியீடாகவும் மாறிவிடுகிறது.

ஜனரஞ்சகமான பார்முலா படங்களில் நிஜமும் நிஜமற்றதும் சங்கமித்து பார்வையாளனின் உணர்வை மயக்கத்திலாழ்த்திவிடுகிறது. நிஜவாழ்ககையில் பெரும்பாலும் அவலங்களால் வாடும் சராசரி இந்தியப் பார்வையாளன் திரையில் விரியும் ஆச்சரியங்களும் கட்டுக்கதைகள(ளு)ம் நிரம்பிய உலகத்தில் பயணிக்கிறான். உதாரணமாக, வாழ்க்கையில் வரவுக்கேற்ப செலவு செய்து வாழக் கஷ்டப்படும் சாமான்ய மனிதன் சினிமா கதாநாயகனின் ஆடம்பர வாழ்க்கைச் சூழலுக்குள் வீசியெறியப்படுகிறான். நாயகனின் மாடமாளிகையும் படாபடோபங்களும் அழகான மனைவியும் எல்லாம் திரை ரசிகனைப் பொறுத்தவரையில் நிஜமற்ற தளத்தில் நிற்கிறது. ஆனால் சினிமாவின் அசைவுகளினூடே, சம்பவங்களினூடே, பார்வையாளன் கதாநாயகனின் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டு அவனின் வண்ண உலகத்தோடு ஐக்கியமாகிவிட்டு, இவன் தன் சொந்தமான எதார்த்த வாழ்க்கையை மறக்கிறான். அத்துடன் தன் வாழ்க்கையின் வெறுமையை தியேட்டரின் இருளின் போர்வையில் திரையிலுள்ள பிரமிக்கவைக்கும் நிஜங்களால் நிரப்புகிறான். ஒரு விதத்தில் சொன்னால் அவன் அவனுடைய நிஜவாழ்க்கையின் நிஜத்தன்மையை இழந்துவிட்டு கற்பனை உலகத்துக்கு பறந்து செல்கிறான். ஒரே நேரத்தில் நிஜத்துக்கும் கற்பனைக்கும் இடையில் சினிமா இப்படித்தான் அசைந்து கொண்டிருக்கிறது.



ஜனரஞ்சகமான பார்முலா படங்களில் நிஜமும் நிஜமற்றதும் சங்கமித்து பார்வையாளனின் உணர்வை மயக்கத்திலாழ்த்திவிடுகிறது. நிஜவாழ்ககையில் பெரும்பாலும் அவலங்களால் வாடும் சராசரி இந்தியப் பார்வையாளன் திரையில் விரியும் ஆச்சரியங்களும் கட்டுக்கதைகள(ளு)ம் நிரம்பிய உலகத்தில் பயணிக்கிறான். உதாரணமாக, வாழ்க்கையில் வரவுக்கேற்ப செலவு செய்து வாழக் கஷ்டப்படும் சாமான்ய மனிதன் சினிமா கதாநாயகனின் ஆடம்பர வாழ்க்கைச் சூழலுக்குள் வீசியெறியப்படுகிறான். நாயகனின் மாடமாளிகையும் படாபடோபங்களும் அழகான மனைவியும் எல்லாம் திரை ரசிகனைப் பொறுத்தவரையில் நிஜமற்ற தளத்தில் நிற்கிறது. ஆனால் சினிமாவின் அசைவுகளினூடே, சம்பவங்களினூடே, பார்வையாளன் கதாநாயகனின் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டு அவனின் வண்ண உலகத்தோடு ஐக்கியமாகிவிட்டு, இவன் தன் சொந்தமான எதார்த்த வாழ்க்கையை மறக்கிறான். அத்துடன் தன் வாழ்க்கையின் வெறுமையை தியேட்டரின் இருளின் போர்வையில் திரையிலுள்ள பிரமிக்கவைக்கும் நிஜங்களால் நிரப்புகிறான். ஒரு விதத்தில் சொன்னால் அவன் அவனுடைய நிஜவாழ்க்கையின் நிஜத்தன்மையை இழந்துவிட்டு கற்பனை உலகத்துக்கு பறந்து செல்கிறான். ஒரே நேரத்தில் நிஜத்துக்கும் கற்பனைக்கும் இடையில் சினிமா இப்படித்தான் அசைந்து கொண்டிருக்கிறது.

திரைப்படப் படைப்பாளி தன் கருவிகளின் உதவியால் ஐம்புலன்களின் அனுபலத்தையும் அறிவையும் சேர்த்து ஒரு பெரிய உலகை உருவாக்குவதுடன் தனக்கு உலகைப் புரிந்துகொள்ள ஒரு நிலைப்பாட்டினையும் உருவாக்குகிறான். திரைப்பட இயக்குநரின் காட்சியமைப்பிலுள்ள படிமங்கள் முதலில்கவனிக்கப்படுவதில்லை. பொருட்கள், மனிதர்கள், சம்பவங்கள், செயல்கள் போன்றவைதான் பார்வையாளனின் மனதில் நன்றாகப் பதிகிறது. பொருட்களின் காட்சியமைப்பு (Visual Pattern) பிற்பாடுதான் அமைகிறது.

சிஹீமா என்பது கலையும், குறியீடு மற்றம் தொடர்ச்சிகளின் ஊடகமும் கூட. ஒரு திரைப்படத்தின் அர்த்தம் உண்டாவதென்பது நாம் காணும் காட்சிகளிலிருந்தோ கேட்கும் ஒலிகளிலிருந்தோ மட்டுமல்ல, நாம் காணாத, கேட்காத விஷயங்களிலிருந்தும் அர்த்தத்தைப் பூரணப்படுத்துகிறோம்.ஒரு திரைப்படத்துக்கு அர்த்தமும் நிலையான ஆயுளும் கிடைப்பது, நம் கண்ணோட்டத்தில் நாம் அதைப் புரிந்து கொள்ளும் போதுதான், உயிரற்ற படச்சுருள்கள் பிரொஜக்டர் வழியாகச் சென்று காட்சிகளின் திரையில் அசையும்போதுதான் திரைப்படப் படைப்பு உயிர் பெறுகிறது. மெதுவாக, திரையின், அரங்கத்தின் இருப்பை நாம் மறந்துவிட்டு, காலத்தில் பாதை வழியாக வாழ்க்கையின் நிஜங்களுக்குக் கடந்து செல்கிறோம். சுய நினைவுடன் நடத்தும் இந்தப் பயணம் பிறகு ஒரு சுதந்திரமான லௌகீக அனுபவமாக மாறி, திரைப்படத்தின் உள்ளடக்கமான உணர்வுகள் நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. ஒவ்வொரு ரசிகனும் இலக்கியத்தில் நடப்பது போல இங்கும் ஆழ்ந்து வாசிப்பில் ஈடுபடுகிறான். இந்த வாசிப்பு பார்வையாளனின் அறிவுக்கும் கலாச்சாரத்துக்கும் சமூக அரசியல் சூழலுக்கும் ஏற்றவாறு மாறுபடவும், அந்தப் படைப்பின் கட்டமைப்புக்கும் அர்த்தத்துக்கும் தனக்கென்ற வழி வகுக்கவும் செய்கின்றது. ஒரு சராசரி ரசிகன் தன் முதல் பார்வையில் அந்தப் படைப்பின் ஒரு தோராயமான அர்த்தத்தை மட்டும் புரிந்து கொள்கிறான். இது பொதுவாக வெளிப்படையான விஷயங்களை அடிப்படையாக வைத்துத்தான் செய்கிறான். விமர்சகனான பார்வையாளன் காட்சிகளின் ஒவ்வொரு நிமிடத்திலும் படைப்பின் கட்டமைப்புக்குள் நுழைந்து, மறைந்து நிற்கும் அர்த்தங்களைத் தேடி, சாமான்யமான அர்த்தத்தை மீறி புதிய அர்த்தங்களை நிராகரித்துவிட்டு தன் உள்ளுணர்வின் தன்மைக்கும் கூர்மைக்கும் ஏற்றவாறு வாழ்க்கையின் புதிய அர்த்தங்களைத் தேடுகிறான்.

எழுதும் மொழியில் நடப்பதுபோல் ஒளிந்து நிற்கும் அர்த்தமுள்ள பிம்பங்கள் சக்திவாய்ந்த குறியீடுகளாக சினிமாவிலும் செயல்படுகிறது. ஆங்கிலம், மலையாளம் போன்ற மொழிகளைப் போல அல்ல சினிமாவும் அதன் இலக்கணமும். இருந்தாலும் சினிமா ஒரு தனிமொழியாக இருக்கவும் செய்கிறது. ஒரு சின்னக் குழந்தை கூட சின்னத்திரையிலும் வெள்ளித்திரையிலும் காட்டப்படும் காட்சிகளின் அடிப்படை அர்த்தங்கள் புரிந்துகொள்ளும். ஆனால் சாதாரணமாக தினசரி நாளிதழும் ஜனரஞ்சக வார இதழும் வாசிக்கும் பாமரனுக்கு இதை மீறிய இலக்கியத்தின் ஆழமாக தளங்களக்கு மூழ்கிச் செல்ல வேண்டுமானால் விரிந்த அறிவும் மொழி ஞானமும் தேவை. அதுபோல திரைப்படத்தை ஆழமாக உணர்ந்து ரசிக்க அதன் இலக்கணமும் அதில் பயன்படுத்தும் பிம்பங்களின் அர்த்தமும் தொடர்பும் தெரிந்திருப்பது நன்று. பதிவு செய்யப்படும் ஒலிகளை நாம் எளிதில் தெரிந்து கொள்ளவும் நம் கண்களுக்கும் மூளைக்குப் தனிப்பயிற்சி தேவைப்படுகிறது. திரைப்படக்கலை மேதைகள் சொல்வார்கள் ஒரு 'ஷாட்' வார்த்தையாகவும் 'சீன்' என்பது வாக்கியமாகவும் 'சீக்வன்ஸ்' என்பதை ஒரு பாராவாகவும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று. ஆனால் சில சமயம் ஒரு ஷாட்டே பேசும் வாக்கியங்களாகவும் பாராவாகவும் செயல்படுகிறது. ஒரு வார்த்தை எப்படி அதை உபயோகப்படுத்தும் சந்தர்ப்பத்திற்கேற்ப பல அர்த்தங்கள் கொள்கிறதோ அதுபோல ஒரு ஷாட்டுக்கு முன்னாலும்

பின்னாலும் வரும் ஷாட்டுகளின் தன்மை சீனின் (Scene) அல்லது சீக்வன்ஸின் (Sequence) அர்த்தத்தை பாதிக்கிறது. ரஷ்யாவில் குளஷோவ், ஐன்ஸ்டீன் போன்ற திரையுலக மேதைக் கண்டறிந்த உண்மைகளை நாமும் நினைவில் கொள்வது நல்லது. அதில் முக்கியமான ஒரு விஷயம் பின்வருமாறு: ஒரு நடிகனின் சிரித்த முகம் ஒரு துப்பாக்கியின் க்ளோஸ் ஷாட், பிறகு நடிகனின் பயம் கொண்ட முகம் இந்த மூன்று ஷாட்டுகளை இதே வரிசையில் வைத்தால் நடிகன் ஒரு பேடியைப் போல் நடந்து கொள்கிறான் என்று அர்த்தம் வரும். ஆனால் நடிகனின் இரண்டு ஷாட்டுகளை நேர்மாறாக வைத்தால் அவன் ஒரு வீரனைப்போல நடந்து கொண்டான் என்று அர்த்தம் கொள்ளத் தோன்றும்

மனிதனின் மொழிக்கு அது நிலைத்து வாழும் சமூகத்தின் உணர்வு மண்டலத்திலிருந்தும் அடிப்படை நெறிமுறைகளிலிருந்தும் தான் இலக்கணமும் அழகியலும் அமைகிறது. சமூகத்தின் உற்பத்தித் திறன் மற்றும் உறவுகளின் தன்மையிலிருந்துதான் மொழி வழக்கும் இலக்கணமும் உருவாகின்றது. அப்படியாக அதன் வார்த்தைகளும் வாக்கியங்களும் பாணிகளும் எல்லாம் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையின், வாழும் உணர்வின் சின்னங்களாக மாறுகின்றன. சமூகத்தின் அடிப்படை உறவுகளும் தத்துவங்களும் மாறுவதற்கேற்ப அதன் மொழியின் வழக்கிலும் உபயோகத்திலும் வருகின்ற மாறுதல்கள் அதற்குச் சான்றாகும். அப்படியாக மொழியின் சில வார்த்தைகள் வழக்குகள் எல்லாம் மறைத்துவிட்டு புதியன உருவாகி வளர்ச்சியடைகிறது. நம் மொழியில் அடியேன், தம்புரான் போன்ற வார்த்தைகள் வழக்கத்தில் இல்லாமல் போயிவிட்டது அப்படித்தான்.ஆனால் திரைப்படத்தின் மொழி விரிவாக்கம் அடைவது மேற்கூறிய ரீதியிலல்ல. இலக்கியத்தில் உபயோகிப்பது போல குறியீடுகளும் சொல்லமைப்பும் அலங்காரங்களும் சினிமாவிலும் உபயோகிப்பதுண்டு. ஒரு க்ளீஷே போல உபயோகப்படுத்தப்படுகின்ற படிமங்கள் ஏராளம். சீராக மார்ச் செய்யும் பூட்ஸ் அணிந்த பாதங்களின் க்ளோஸ் அப் ஷாட்டை வைத்து ஒரு ராணவத்தைக் குறிப்பிடுவது இப்படி ஒன்றாகும். ஒரு பொருளின் அடிப்படை அர்த்தத்திலிருந்து மாறுபட்டு, சூசகமாக வேறு அர்த்தத்தை உணர்த்தும் இத்தகைய பிம்பங்கள் மொழியில் வரும் உருவகம் போல செயல்படுகிறது. இத்தகைய பிம்பங்களுக்குத் தேவையான அம்சங்களை ஒரு பிரேமுக்குள் புகுத்தினால் பார்வையாளனுக்கு வித்தியாசமான அர்த்தங்களை உணர்த்த முடியும். இப்படியான உருவக முறைகள் திரைப்படக் கலையின் சுருக்கெழுத்துப் பணி செய்கிறது என்பர் சிலர்.பொதுவான ஒரு இலக்கணம் அல்லது செய்முறை என்றில்லாமல் ஒவ்வொரு திரைப்படப் படைப்பாளியும் தத்தம் வழிகளிலேயே புதிய இலக்கணத்தை உருவாக்குகின்றனர். இன்னொரு விதத்தில் சொன்னால் திரைப்படத்தின் மொழி, காட்சிகளின் சங்கமத்திலிருந்தும், தொடர்புகளின் வழியாகவும் உருவாக்கும் அர்த்தங்களை ஒவ்வொருவரும் அவரவரின் பாணியில் புரிந்து கொள்வதன் மூலமாகவே வளர்கிறது. காட்சியின் பிம்பங்களும் குறியீடுகளும் அவை உருவாக்கப்படுகின்ற சமூகத்தின் உணர்வு மண்டலமாக இயங்கிக் கொண்டு அதுவே ஒரு மொழியாக மாறுகிறது. ஐன்ஸ்டீனின் Battleship Potemkin- ல் வரும் புகழ்பெற்ற ஒடேஸா படிக்கட்டுகளின் சீக்வன்ஸில் உபயோகப்படுத்தப்பட்ட பிம்பங்களின் கலவை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். பெர்க்மானின் பல ப்ரேம்களின் காட்சிகள் அடையாளமாகவும் பிம்பங்களாகவும் புது அர்த்தங்களை உருவாக்குகிறது. சுருக்கமாச் சொன்னால் வேறெந்த கலை வடிவத்துக்கும் செய்ய முடியாத நுகர்ச்சி திரைப்படம் வழியாகச் சாத்தியமாகும் போது மட்டுமே ஒவ்வொரு திரைப்படப் படைபாளியும் தனக்கே உரிய திரைப்பட மொழியைக் கண்டடைந்திருக்கிறான் என்று சொல்லிக்கொள்ள முடியும்.

---

## ஆங்கரை பைரவி

வெறுமையாய்  
இருக்கிறதென சம்மதித்தேன்  
என் வெள்ளைத்தாளில்  
அவன் அழுதுவதற்கு  
எழுதும் போது இருந்தவலி  
கூடுதலாகிறது  
வளரும் படைப்பை  
ஊர் பார்த்து சிரிக்கும்  
ஒவ்வொரு நொடியும்.


ஓவியம் : தாரிகா



# கோவா கோவா கான்

## சுப்ரபாரதி மணியன்


ஓவியம் : ராஜா

இந்தியாவின் பிரதானமான சர்வதேசத்திரைப்பட விழா கோவாவை நிரந்தர இடமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. முன்பெல்லாம் புதுதில்லி இதற்காகப் பயன்பட்டது. பிறகு முக்கிய மாநிலத் தலைநகரங்களில் இதை நடத்துவது என்ற முயற்சி பல்வேறு நிர்வாகச் சிக்கல்களுக்குக் கொண்டு சென்றது. எனவே நவம்பரில் நடக்கும் சர்வதேசத் திரைப்பட விழாவின் நிரந்தர இடமாக கோவா தேர்வு செய்யப்பட்டு நடந்து வருகிறது. புது தில்லியைப் போல பெரிய திரையரங்குகள் இல்லாதது, திரையிடப்படும் அரங்குகளுக்காக தூர இடைவெளி அதிகமாக இருப்பது, வருடந்தோறும் இலவச 'பாஸ்' பெறுபவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் நெரிசல், ஒவ்வொரு படத்திற்கும் மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டிய கட்டாயம் போன்றவை கோவாவை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கான முழுமையாக உகந்ததாகச் செய்யவில்லை என்றக் குறைகள் எப்போதும் பேசப்படுகிறது. வெளிநாட்டுப் பயணிகள், திரைப்படத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், மதுபான பிரியர்களுக்கு உகந்த இடமாக இருப்பது சிலருக்கு ஆறுதலாக இருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் கோவாவில் நடைபெறும் சர்வதேசத் திரைப்படவிழாவில் குறைந்தது 40 நாடுகளைச் சார்ந்த படங்களும், 20 இந்திய மொழிப்படங்களும் திரையிடப்படுவதுண்டு. ஆனால் உள் மாநில மொழியாக கொங்கணியில் படங்கள் இடம் பெறுவதில்லை என்ற குறையும் இருக்கிறது.

சிறிய மாநிலம் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலம். கார்பரேட்டுகளின் ஆளுமையைக் கொண்டது. அரிசி, பாக்கு, தென்னை போன்றவை பிரதான விளைப்பொருட்கள். இந்திய சுற்றுலாத்துறை வருமானத்தில் 15 சதவீதம் தரும் மாநிலம். நாட்டக், தியடர், ஜாதர் போன்றவை கோவாவின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகள். கொங்கணிப் பாடல்களின் மெட்டுகளில் தமிழில் நிறைய வந்துள்ளன. மும்பாய் அரசன் என்றால் கோவா ராணி. கொங்கணி, மராத்தி மாநிலத்தில் புழக்கத்தில் உள்ள மொழிகள். கொங்கணியில் வெகு அபூர்வமாகவே படங்கள் எடுக்கப்படுகின்றன.

சமீபத்திய டொரண்டோ திரைப்படவிழாவில் பரிசு பெற்றிருக்கிற "மேன் பிகைண்ட் பிரிட்ஜ்" என்ற 96 நிமிடப்படம் குறிப்பிடத்தக்கபடமாகும். மனைவியை இழந்த காட்டிலாகா ஊழியர் ஒருவர் இறந்துபோன மனைவியைப் பற்றிய நினைவுகளில் அமிழ்ந்திருக்கிறார். மனநிலை பாதிக்கப்பட்ட காட்டுப் பகுதியில் சுற்றித் திரியும் ஒரு பெண்ணிற்கு ஆறுதலாக இருக்கிறார். உணவும், இருப்பிடமும் தருகிறார். பாலியல் ரீதியாக அவளைப் பயன்படுத்திக் கொள்கிறார். அவள் கர்ப்பமுறும்போது சுற்றியுள்ளவர்களால் விமர்சிக்கப்படுகிறார். அவர் சார்ந்திருக்கும் சமூகம், ஜாதி சார்ந்த இறுக்கங்கள் அவரை நிலை குலைய வைக்கிறது. இயற்கை சார்ந்த ஈடுபாட்டுடன் இருந்தவரின் குடும்ப வாழ்க்கைச் சிதைவுகளை இப்படம் சித்தரிக்கிறது.

கோவாவின் இயற்கை பெரும் கொடையாக இருக்கிறது.

கோவாவின் எழில் மிக்கத்தன்மையை ஆற்றின்மூலம் வெளிப்படுத்தியவர் நளினி என்ற இயக்குனர். அவரின் "கோவா ஆறுகள்" என்ற குறும்படம் கோவாவின் பல்வேறுப் பகுதிகளில் ஓடும் ஆறுகளின் தன்மைபற்றியும், அழகு பற்றியும் விவரிக்கிறது. "கோவா கோவா கான்" என்ற குறும்பட இயக்குனர் குருஸ் கேன்டீன்வாலா பம்பாயில் பிறந்தவர், சிகாகோவில் கல்வித்துறை விரிவுரையாளராக பணிபுரிகிறவர். இவரின் "கோவா கோவா கான்" திரைப்படம் கோவாவின் பல்வேறு பகுதிகளில் இரும்புத்தாதுகளுக்காக நிலம் ஆழமாகத் தோண்டப்படுவதைப் பற்றிப் பேசுகிறது. சுமார் பத்து சதவீத கோவாவின் நிலம் சுரங்கத்தால் அமைந்திருக்கிறது.

குறிப்பாக கொலம்பா பகுதி சுரங்கங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் வெடிமருந்துகள் வைக்கப்பட்டு பாறைகளைத் தகர்த்துத் தோண்டுகிறார்கள். சுரங்கக்கல்களிலிருந்து எடுக்கப்படும் இரும்புத் தாதுக்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பெரும்பாலும் அரசியல் கட்சி சார்ந்தவர்கள் சுரங்கங்களைத் தோண்டும் பணிகளுக்கான குத்தகையை எடுத்துச் செயல்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு எதிர்ப்புக் குரலும், ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் பெரிதாய் பாதிப்பதில்லை. தொடர்ந்து சுரங்கங்கள் தோண்டப்படுவதால் ஒலி மாசுபாடு அதிகரித்து வருகிறது. சுற்றுச் சூழல் கேட்டால் மக்கள் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறது. குடியிருப்பு பகுதிகள் நில அதிர்வால் பாதிக்கப்படுகின்றன. விளைநிலங்கள் பல சமயங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்றன. இது ஆறுகளின் பாதைகளை மாற்றி விடுகிறது. குடியிருப்புப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுப்படாமல் தவிர்க்கச் செய்கிறது. மக்கள் தங்கள் குரலை எதிப்புணர்வாய் வெளிப்படுத்தும்போது துன்புறுத்தப்படுகிறார்கள். தாக்கப்படுகிறார்கள்.

இதுபற்றிப் பேசும் தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகள் தொல்லைக்குட்படுத்தப்படுகின்றன. சமூகப் பணியாளர்கள் துன்புறுத்தப்பட்டு விரட்டப்படுகிறார்கள். முதிர்ந்த சமூக சேவகி பெண்மணி ஒருவர் புல்டோசர் போன்ற பெருத்த இயந்திரங்களின் நகர்வுகள் குறித்து எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் செய்யும் போது அவரை இடித்து வீழ்த்திவிடும் வகையில் இயந்திரங்கள் அவரை நெருங்குகின்றன. அவர்களின் பணிகளுக்கு இடைஞ்சல் செய்ததாக அவர் கைது செய்யப்படுகிறார். நூற்றுக்கணக்கான சமூக நலத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுகிறார்கள். ஆட்சியாளர்களுக்கும், அதிகாரம் உள்ளவர்களுக்கும் ஆண்டுதோறும் இதனால் கிடைக்கும் ஏற்றுமதி வர்த்தகத்திலானத் தொகை 18,000 கோடி ரூபாய் அந்நிய செலவாணி. அந்த மாநில மக்களின் நலனையும், வாழ்க்கையையும் விட பெரியதாக இருக்கிறது. இந்த அம்சங்களை கொண்டிருக்கும் "கோவா கோவா கான்" ஆறுகளைப் போலவே சுரங்கங்கள் மேலும் மேலும் ஆழப்படுத்தப்படாமல், விரிவுபடுத்தப்படாமல் மக்களின் வாழ்க்கையை சீரழிக்காமல் இருக்க வேண்டிய அவசியம் குறித்துப் பேசுகிறது. அதே இயக்குனர் குருஷின் "நியூ எம்பயர்" என்ற முந்தின குறும்படம் பம்பாயின் ஒரு சாதாரண உணவு விடுதி மேற்கத்திய ஆக்கிரமிப்பின் அடையாளமான மெக்டொனால்டு விடுதியாக மாறிப் போயிருப்பதைக் காட்டுகிறது. தெரு அளவில் நிகழ்ந்துள்ள மாற்றங்களும், விவரிப்பு நடவடிக்கைகளும் அவற்றின் பழைய முகத்தையே மாற்றிவிட்டிருக்கின்றன. நகரமயமாதலின் உச்ச கட்ட தீவிரத்தையும், உலகமயமாக்கல் திறந்து விட்டிருக்கும் புதிய பொருளாதாரச் சந்தையும், அதன் மூலம் உருவாகிவரும் நவகாலனிய சூழலும் உணவு விடுதியொன்றை முன் வைத்து அலசப்படுகின்றன. இந்த மாற்றங்களை உணராத வகையில் சாதாரண மக்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய சர்வதேசத் திரைப்படவிழாவின் மையமான கோவாவில் இருந்து அதன் மாநில மொழியான கொங்கணியில் மிகக் குறைந்த படங்களே வருகின்றன. இரும்புதாது எடுக்கும் தொழிலால் மாநிலத்தின் பெரும்பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாய நிலங்களின் கையகப்படுத்தப்படலும், விளை நிலங்கள் குறைந்து வருவதும். விவசாயம் சொற்பமாகி வருவதும் கவலை கொள்ளும் விஷயங்களாகியுள்ளன. பல்வேறு பிரச்சினைகளை முன் வைத்தும், சுற்றுச் சூழலை மையமாகக் கொண்டும் மக்கள் தொடர்ந்து போராடும் காரணத்தால் இனி மேல் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு அனுமதி தருவதில்லை என்று மாநில அரசு தீர்மானித்திருக்கிறது. இதுவரை அனுமதியளிக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டப் பகுதிகளும், இரும்பு தாது எடுக்க ஆழமாக்கப்படும் சுரங்கங்களும் கோவாவின் இயற்கைக்கு எதிரான பேரழிவு அம்சங்களாக விளங்குகின்றன.



## ஆங்கரை பைரவி கவிதைகள்


ஓவியம் : தூரிகா

யார் முந்தப் போகிறோம்
மர்மமாகவே இருக்கிறது.
உன் முயற்சிகளெல்லாம்
வெளியில் தெரிந்து
ஆர்ப்பாட்டங்களாகி விட்டன...
உன்னை உயிர்ப்பிக்க
நிறையப் பணமும் செலவாகிவிட்டது.
உயிர்ப்பித்தலின் லாபக் கணக்கு
அர்த்தமில்லாததாக இருக்கிறது
எனது முயற்சிகளுக்கான
அடையாளங்களைக் காண்பது கடினம்.
டைரிக் குறிப்புகளின் மர்ம மொழியில்
பொதிந்திருக்கிறது
மூடப்பட்ட காகித கவர்களின் உள்ளில்
கனத்து உறங்குகிறது.
அறைச் சுவர்கள் மற்றும்
அறைப் பொட்கள் சாட்சிகளாகி இருந்தன.
எவையும் நேரடிச் சாட்சி
சொல்லாது.
ஆனாலும் அடையாளங்களைச்
சுமந்து கொண்டிருக்கும்
தடுமாற்றமும்
அதற்கு ஈடு செய்வதாக இருக்கிறது.
அதன் வெற்றிடத்தை நிரப்புவதாக இருக்கிறது.
என்னை ஒத்த,
என் வயதை மீறின
எவரின் வார்த்தைகளும்
பொருத்தமற்றதாகவே
பிரபஞ்ச மூலையில் என்னைப் போல எழுதும்
ஒருவனின் மையின் ஈரம் உலராத வார்த்தைகள்
என் வாக்கியத்தை நிரப்புவதற்காக
வெற்று வெளியில்
அலைந்தும், திரிந்தும்..


ஓவியம் : சஜீம்

காட்டிக்கொடுக்கிறது
வளி(வலி)
வண்டுகளுக்கும்
பறவைகளுக்கும்
பூத்து குலுங்கும் செடிகளையும்
காய்த்து கனியும் மரங்களையும்.
மொட்டுக்களை மோதி
திறக்காத கோபத்தில்
வண்டுகளும்,
கனிகளை கொத்தி
முடமான அலகோடு
பறவைகளும் அனுப்பிவைக்கின்றன
மிருகங்களை
கையில் விதவிதமான
கோடரிகள் கொடுத்து
மரங்களின் இருப்பை
மணம் பரப்பி
காட்டிக் கொடுக்கிறது
அவைகளுக்கும்
வழக்கம் போலவே
வளி(வலி).

# ஜெ. நிஷாந்தினி கவிதைகள்

## உடைபடா நினைவு

எனது கவனத்திலிருந்து
எளிதில் நழுவிவிடாத உலர்ந்த
ஞாபகத்தை
காகிதப் பேழைக்குள்
பொதிந்து வைக்கிறேன்

அவசரப்படும் சம்பவங்களை
வாசமாக் கோர்க்கையில்
நெருங்க முடியா தனிமை
பெரும் கடலென மல்லாக்க
விரிந்து கிடக்கின்றது

என்னைச் சுற்றி
புனையப்பட்ட மாய உலகின்
திரைகளை கிஸிக்காமல்
விலக்குகிறேன்

பேரானந்த பெருவெளியில்
பசையிழக்காத காட்சிகளைப்
பதிவு செய்கிறேன்
இருந்தும் மனதிலிருந்து
கழன்று
வீணாய் போனவை ஏராளம்.

## வடு

துயரத்தின் அடர்ந்த இருளாய்
வியாபித்திருக்கிறது பிரபஞ்சம்

மரத்துப் போன கற்பனை வற்றிய
மன இடுக்குகளிலிருந்து
அவ்வப்போது துர்தேவதைகள் வெளியேறுகின்றன

நுழைய முடியாத குகைகுள்
காவு கொடுக்கப்பட்ட
மிருகத்தின் மரண ஓலம் உரத்துக் கேட்கிறது.

புலப்படாத சப்தங்களோடு
பின் தொடர்ந்து
அரூபமாய் மறைந்து போகிறார்கள்

பீடத்தில் தேவதச்சன் அழுதபடியிருந்தாலும்
உன்னத தருணத்தின் வாசலை எட்டிவிட
நகர்ந்து கொண்டிருக்கிறது காலம்.

பழங்களைத் தேடித் திரியும் பறவை
இடையறாது தொடரும்
பறவைகள் முனுமுனுப்புடன்
நெடுந்தூரங்களைக் கடந்து செல்கின்றன

அருகாமையில் பழங்கள் நிரம்பிய
மரம் பயணச் சாலையில்
மலர்களை உதிர்த்து
வரவேற்க தயாராய் இருக்கின்றது

ஆனால் மரம் குறித்து
எந்த துப்பும் கிடைக்கவில்லை
பறவைகளுக்கு

மரங்களிலிருந்து
பழங்கள் உதிர
பறவை பசியாற
இனி வாய்ப்பு இல்லை

காலம் பனிக்கட்டியாய்
உறைய

சோம்பல் முறித்து
அவசர அவசரமாய் புதுப்பித்து
காத்திருக்கிறது
பறவை வந்து இளைப்பாற........


ஓவியம் : தூரிகா



# மொ. இளம்பரிதியின் குறுங்கவிதைகள்

1. அருவியில் நனைதல்
ஆற்றில் மிதத்தல்
கிணற்றில் கிடத்தல்
எல்லாம் போய்
வாளித் தண்ணீரில்
முடங்கிக் கிடக்குது
வாழ்க்கை.

2. கணிணீர் வெள்ளம்
பிரவகித்துப் போனாலும்
வடிவப் பாறையாய்
நின்று சிரிக்கின்றன
நீயும் நானும்
நடந்து களித்த
நாட்கள்

3. உருகிக் கொண்டிருக்கிறது இரவு
இமைகளின் மேல்
தகித்துக் கொண்டிருக்கிறது
உன் நினைவு.

4. ஒவ்வொரு முறை
கடந்து போகையிலும்
வாஞ்சையாய் புன்னகைக்கும்
மின் மயானம்

5. இழந்த விழிகளுடன்
எங்களூர் எல்லைச் சாமிகள்
மருவத்தூருக்கும்
திருப்பதிக்கும்
பம்பைக்கும்
செல்லும் பாதைகளின்
அடர்த்தி பார்த்தபடி.

6. வேர்கள் வெந்த
தாமரைக் குடும்பம்
வெக்கையில் புழுங்கும்
ஊருணி
பொங்கி வழியுது பெப்சி.

7. உலக ரட்சகனாலும் மாற்ற முடியவில்லை
தலைமுறைகள் சுமந்த முத்திரை
"வேதக்காரப் பறையன்"

# மொ. இளம்பரிதியின் குறுங்கவிதைகள்

8. ஏகாந்த வெளியில் மிதக்கும்
ஆட்காட்டிக் குருவியின் ஓலம்
கொஞ்சமாய்த் தணிகிறது
உச்சி வெய்யில்.

9. அழுதிருக்குமோ அந்த
ஒத்தைப் பனைமரம்
விசிறி பிடித்த விரலிடுக்கில்
கசியும் வேதனை

10, கள்ளிச் செடியும் நெல்லுக் கதிரும்
கை கோர்த்து மாரடித்தன
நாளைத் திறக்கப் போகும்
கருப்பைக் காய்

11, பெருங்காய டப்பாவில்
மூடி வைத்தப் பொன்வண்டு
செத்துப் போனதற்காய்
அழுதுகொண்டே போன தோழி
எங்கிருக்கிறாய்?




12. புழுதி உழவு ஓட்டிவிட்டு
வெள்ளை வான் பார்த்திருக்கும்
ஒத்தை ஏர் சம்சாரி போல
உன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

13. வண்ணம் திரிந்த செம்மண் பூமி
குன்னிக்கிடக்குது மனசு
சிங்கூர்- நந்திகிராமம்

14. நாளை பொழுதிலும்
என் பலங்கள் நிராகலிக்கப்படுமெனில்
சூரியனைத் துண்டாடுவேன்.

15. விரல்களுக்குக் கொம்பு சீவு
சன்னல் கம்பிகளை வருடுவதற்கல்ல
பட்டியலிடுபவன் சங்கைக் கீற.

(மரணத்தைத் தழுவுவதற்கு முன் இளம்பரிதி வேணு 'என் கவிதைகள்' என அனுப்பியவற்றிலிருந்து சில அவர் நினைவாக).



கவிதை :

## கரிகாலன்




நான் அமர்ந்திருக்கும் இந்நாற்காலியில்
டால்ஸ்டாய் அமர்ந்திருக்கிறார்
எனது சாப்பாட்டு மேசையில்
ஹெம்மிங்வே உணவருந்தியிருக்கிறார்
அவருக்கு விக்கியபோது
தண்ணீரை நீட்டியதும்
அவரது கண்களில் ஈரம் கசிந்தது
மொட்டைமாடி நிலவை எம் குழந்தைகளுக்குக் காட்டி
"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்"
பாரிமகளிர் சோகம் சொன்னார்கள்
தோட்டத்தின் சிமெண்ட் பெஞ்சில்
அமர்ந்த காஃப்கா எம் குழந்தைகளை
கிளியாகவும் மணிப்புறாவாகவும் மாற்றினர்
அப்போது என் மனைவியின் பதற்றத்தை
அவர் ரசித்திருக்க வேண்டும்
இப்பறவைகளை உங்கள் புதின வெளியில்
பறக்கவிடலாமே என்றார்
காதில் விளையம் மாட்டி ஜீன்சில் வந்த
பாரதியாரை குழந்தைகளால் நம்பவே முடியவில்லை
சென்ற வாரம் வந்திருந்த கம்பர்
கவிதைப் புத்தகங்கள் விற்காதது பற்றி
கவலை தெரிவித்தார்
கம்பராமாயணத்தின் நவீனப் பதிப்பைத் தந்து
விமர்சனம் எழுதித்தர முடியுமாவென்றார்
தெரிதாவும் ஃபூக்கோவும்
தொலைபேசியில்தான் பழக்கம்
நேற்று மதுக்கடையில் வொய்ன் வாங்கும் போது
"உன் மனைவிக்கா"? என்றார் நண்பர்
"ஷேக்ஸ்பியருக்கு" என்றேன்
"ஒத்தெல்லோ, டெம்பஸ்ட்டெல்லாம்
எழுதிய ஒரிஜினல் ஷேக்ஸ்பியருக்கா? என்றவர்
மேலும் கீழும் பார்த்தபடியே
"நண்பர்கள் யூகித்தது சரிதானென்றார்".

கவிதை :

## *இரத்தின மூர்த்தி*

## விழிப்பு

விடியல்கள் அவசியமற்றதாகிறது
நிகழ்வுகளை நியாயப்படுத்த முடியாததால்.
எதற்குமே எல்லையுண்டு
என்பதையெல்லாம் கொலையாக்கிவிட்டு
எல் நிகழ்வுகளும் தறிகெட்டாடுகிறது.

விமர்சனங்களையெல்லாம்
முச்சந்தியில் வைத்து கொளுத்திவிடுவதால்
தவறுகளை சாதிக்க எவ்வித
இடையூறுகளும் இருப்பதில்லை என்பது
அநியாயப்படுத்துப்படுவதுமில்லை

உள்மனதின் உருவங்கள்
கானலாய் போவதற்குண்டான உள்ளீடுகளை
பகல்பொழுது சட்டமாக்கிக் கொள்வதால்
அந்திக்குள் பாவங்கள் கூடுவது
தடுக்க இயலாததாகிறது.

பாவங்கள் புரியாத மனிதனுக்கு கிடைக்கும்
வெகுமானம் நிராதரவு என்பதால்
தர்மத்தை கடைபிடிக்க இயலாது
உயிர்துடித்து பதைபதைக்கும் ஆன்மாவானது
பகற்பொழுதுகளை சாபம் என்கிறது.

இரவு தந்த போர்வை
இயலாமைக்கு ஆறுதல் கூறி
அரவணைத்துக்கொள்கிறது.

துயில் கொள்ளும் இரவு மனிதனை
மனிதனாக வைத்திருக்கிறது
விடியலே வேண்டாமென்று.



ஓவியம் : அருணகிரி



## உலக, உள்ளூர் பண்ணாடிகள்

**சாமக்கோடாங்கி ரவி**



ஓவியம் : தாரிகா

உலகின் உன்னதமான நாடு அமெரிக்கா தான் என்று மக்களின் பொது புத்தியில் தெளிவாக மூளைச்சலவை செய்ய ஊடகங்கள் இன்று துணை நிற்கின்றனர்.

மக்களின் சிந்தனையை திசை திருப்ப உலக கோப்பைகள், உள்ளூர் தேர்தல் திருவிழாக்கள், நடிகர், நடிகைகளின் வசீகர சொற்பொழிவுகள், ஏழை எளிய மக்களின் இலவச எதிர்பார்ப்புகள்.

உலக பண்ணாடியான அமெரிக்கா செல்வ செழிப்பில் மிதந்ததாக நம்பி அமெரிக்கா சென்று தங்கி இருக்கும் வெளிநாட்டவர் கதை என்னவென்பதை பார்க்கின்றபோது திருடனுக்கு தேள் கொட்டிய கதையாக தான் முடிந்திருக்கிறது. நம்முடைய வெளி நாட்டு மோகம் சாதாரண மோகம் அல்ல.

சிங்கப்பூரும், சவுதி அரேபியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. புதிதாக ஆப்பிரிக்காவும், ஜப்பானும் சேர்ந்து இருக்கிறது. என் உறவினர் வெளி நாடுகளில் இருக்கிறார் என்று சொல்லுவதில் இவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி. பாவம் அவர்கள், உறவினர் மகிழ்ச்சியில் மண் அள்ளி போடக்கூடாது என்பதற்காகவே அனைத்து துக்கங்களையும் தாங்கி, தன்மான உணர்ச்சியை குழிதோண்டி புதைத்து வாழ்க்கையை வாழாமல் மந்திரித்து விட்ட கோழியை போல திரை கடலோடியும் திரவியம் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். எதோ சொற்ப நபர்களுக்கு வெளிநாட்டு வாழ்க்கை அமையலாம்.

திரைத்துறைக்கு சென்றவர்கள் எல்லாம் கலைஞராகி விட்டால், கோடம்பாக்கம் தாங்காது. சுனாமி போல அது இயற்கையாக எப்பொழுதாவது தான் வரும்.

உள்ளூர் சொந்தபந்தங்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் சொந்த கிராமம் இதில் உள்ள சிறிய கோவில் திருவிழாக்கள், மாடு கன்று போட்டது, முறை சொந்தங்களுடனான சின்ன சின்ன கோப தாபங்கள் அனைத்தையும் இழந்து கான்கீரிட் சிறைகளுக்குள் 16 மணி நேரப்பணியில் பஞ்சு புகையில் எத்தனை சுமங்கலிகள். புரோக்கர்களுக்கு (மாமாக்களுக்கு) கொஞ்சம் கூட மனச்சாட்சி இல்லை என்னுடைய நலனில் மிகவும் அக்கறை கொண்ட ஒரு சகோதரி என்னிடம் நீ என்ன தொழிலாளிகளை மட்டுமே பதிவு செய்து கொண்டு இருக்கிறாய், இங்கே முதலாளிகளுக்கு சிரமம் இல்லையா, அவர்கள் பாடு உனக்கு தெரியாதா என்று..?

என்னை பொறுத்தவரை உழைக்கின்றவர்கள் எல்லோரும் தொழிலாளிகள். தொழிலாளிகள் என்கின்ற பெயரில் சோம்பேறிகளாக ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றவர்கள் முதலாளிகள். உதாரணத்துக்கு சில வங்கி ஊழியர்கள் அரசு ஊழியர்கள் எந்த வேலையும் செய்ய மாட்டார்கள் எதில் கையூட்டு பெறலாம் என்பதிலும், ஒரு வேலையை செய்ய கூடாது என்பதற்கான காரணங்களை மிகத் தெளிவாக தெரிந்து வைத்திருப்பார்கள் இவர்களே முதலாளிகள்.

மொழி எனக்கு இன்றும் என் கருத்துக்களை உங்களிடம் பகிர்ந்து கொள்ள இடம் கொடுக்கவில்லை. ஏனென்றால் நாம் எல்லோருமே அவரவர் வாழ்க்கை பாதையில் ஒரு அகராதி வைத்துள்ளோம், அதில் ஒவ்வொருவரும் பொருள் கொள்வது வேறு விதமாக இருக்கிறது.

திருப்பூரை பொருத்தவரை இங்கே துவக்கத்தில் வாழ்க்கையை தொழிலாளியாக துவக்கியவர்கள். பின்னிட்டு முதலாளியானவர்கள். மொத்தத்தில் திருப்பூர் என்பது தொழிலாளிக்கு பிறந்த முதலாளிகள், முதலாளிக்கு பிறந்த தொழிலாளிகள் போன்ற ஒரு கலப்பினம்.

அது இயற்கையும் கூடதான் தன் குழந்தை குட்டிகள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக தாய் தந்தையர் எதையும் ஊதாரித்தனம் செய்யாமல் வாழ்நாள் முழுவதும் சிக்கனமாக சேமித்து கொடுக்கின்ற சொத்து, இன்று மக்கள் எங்களாலும் சம்பாரிக்க இயலும் என்று ஆணவமாக நுகர்பொருள் கலாச்சாரத்தில் கூட படிக்கிறவன் இப்படியெல்லாம் இருக்கிறார்கள், நீ இன்னும் பழமைவாதியாக இருக்கிறாய் என்று கூறி சமுதாயத்தில் நிற்க முடியாமல் தவிக்கின்றதையும் நம்மால் பார்க்க முடிகிறது.

இன்றும் விளக்கமாக சொல்ல வேண்டுமானால், சில தொழிலாளிகள் கையில் உள்ள பணத்தை போட்டு அதுவும் பற்றாமல் தெரிந்தவர்களிடம் கடன் வாங்கி, அதுவும் பற்றாமல் கந்து வட்டிக்கு கடன் வாங்கி அதுவும் போதாமல் மனைவியின் தாலி வரை அடமானம் வைத்து, இரவு பகல் தூங்காமல் குழந்தை குட்டிகளுடன் பேசாமல் அவர்களுடன் உணவருந்தாமல் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளாமல் கிடைத்த உணவை உண்டு இருந்த இடத்தில் கோழி தூக்கம் போட்டு குறித்த காலத்தில் பெட்டியை தயார் செய்து கொடுத்து, உயிர் வந்தது போன்ற உணர்வை பெறுகின்ற நபர்கள் முதலாளிகள் என்கின்ற பட்டுத்துணிக்கடியில் முள்மெத்தையில் பூளகாங்கிதம் அடையும் தொழிலாளிகள்.

ஐந்து நட்சத்திர விடுதியில் வெளிநாட்டு மதுவகைகளை போதை இறங்காமல் குடித்துக் கொண்டு, சீட்டு விளையாடி இந்த ஊர் வேண்டாம் வெளியூர் போலாம் என்று போதையிலேயே ஊட்டி போன்ற இடங்களுக்கு சென்று போதையிலேயே ஊர் திரும்புவது. அனைத்து வேலைகளுக்கும் உயர்ந்த கல்வி நிறுவனங்களின் படித்த மேல்தட்டு மக்களின் வாரிசுகளை கொண்டு தொழில் நடத்தி, சம்பிரதாயமாக கம்பெனி நடத்தி குத்தகைதாரர்கள், அவர்களுக்கு கீழே உள் குத்தகைதாரர்கள் கொண்டு பனியன் கம்பெனியை நடத்துவது. நான்கு உள்குத்தகைதாரர்கள் யார் குறைவான கூலியில் வேலை செய்கிறார்களோ அவர்களிடம் வேலையை கொடுப்பது. இவர்களுடைய அலுவலகம் ரூ.10, 20 இலட்சங்கள் இருக்கும் உள் அலங்காரங்களுக்கு மட்டும். ஆனால் தொழிலாளர்களுக்கு ஒழுங்கான கழிப்பிட வசதி ஒரு 10 ஆயிரம் ரூபாயில் செய்ய மாட்டார்கள். இவற்றையெல்லாம் மீறி நிறைவாக இவர்கள் செய்கின்ற வேலை இவர்களுக்கு முதலாளி என்கிற தகுதியை நிர்ணயம் செய்யும். அதுதான் "டெபிட்" எதற்கு என்று தெரியாது நிறுவனத்தை நடத்த மாட்டார்கள். தொழிலாளர்களிடம் கலந்து பேசமாட்டார். வேலை செய்து கொடுத்தவர்களிடம் தொடர்பு எல்லைக்கு வெளியே இருப்பார்கள் இவர்கள் தான் பல முதலாளிகள் திருப்பூரில். இதில் சாயப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண்பதெங்கே? உள்ளூர் பண்ணாடிகளை கிட்டத்தட்ட சொல்லிவிட்டேன் உலக பண்ணாடிகளை பற்றி எழுதியாக வேண்டும் இல்லையா...?

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளே சி.அய்.ஏ ஏஜெண்டுகள் மூலம் உலகம் பூராவும் தங்களுடைய ஆதிக்கத்தை நிலை நாட்ட பல்வேறு தகிடுதத்த வேலையை செய்து கொண்டு இருப்பார்கள். இவர்களின் முக்கிய தொழில், தொழில் நுட்பம் மிகுந்த ஆயுதங்களை செய்து அதை உலகம் பூராவும் உதவுவது போல்விற்பனை செய்து அந்த நாட்டை கடன்கார நாடாக மாற்றம் செய்து ஆதிக்கத்தில்அடிபணிய வைப்பது. இதற்கு கந்துவட்டிக்காரன் வேலையை, உலக வங்கி செய்து வருகிறது. உலக வங்கியிடமிருந்து கடன் வேண்டுமானால் கந்துவட்டிக்காரன்சொல்லுகின்ற கட்டளைக்கு (ஒப்பந்தம்) அடிபணிய வேண்டும்.

உலக பண்ணாடிகள் பழங்குடி மக்களை அழிப்பார்கள், அவர்களின் இருப்பிடங்கள், கனிம வளம், எண்ணெய் வளம் போன்றவற்றை கொள்ளையடிப்பர், கொலை செய்வார்கள். அணைகள் கட்டுகிறோம் என்று கூறி விளைநிலங்களை துவம்சம் செய்வார்கள். இதையெல்லாம் விட இவர்கள் அணுக்கழிவுகளை ஏமாந்த நாடுகளில் தள்ளி விடுவார்கள் அல்லது கடலில் கொட்டுவார்கள்.

உள்ளூர் பண்ணாடிகள் இங்கே ஆதிக்கத்திற்காக என்ன வேண்டுமானாலும் செய்வர். எந்த தேர்தல் நடந்தாலும் இவர்களின் சிந்தனை உழைப்பு எப்பொழுது ஆதிக்கத்திற்காக தக்க வைத்து கொள்வதுதான்.

உலக பண்ணாடி நாடுகளுக்குள் சண்டையை மூட்டுவது, நான் உலக காவல்காரன் என்கிற பெயரில் பேரழிவுகளை ஏற்படுத்துவது, எந்தெந்த நாடுகளின் மக்களின் உண்மையான தலைவர்களை மாற்றுவது போன்ற மாமா வேலையை செய்வார்கள். அதற்காக எதையும் செய்யக் கூடிய துணிவு பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ரஷ்யாவை குடைச்சல் கொடுக்கத்தயார் செய்யப்பட்ட நபர் பின்லேடன். ராஜீவ் காந்தி கொலை வழக்கில், இந்திரா காந்தி கொலை வழக்கில் சி.அய்.ஏ பங்கு அதிகம் உண்டு. அதே போல இலங்கை போரில் அமெரிக்க பங்கு நிறையவே உண்டு சமீபத்திய லிபியா கிளர்ச்சியிலும் கூட.



Kanavu thoguppu
advertisement

# புதிய புத்தகங்கள்

## தென் கொங்கு : துரை. அங்குசாமி

ஒரு வட்டாரத்தில், குறிப்பாக ஒரு உட்பிரிவைப் பற்றி மட்டும் ஆய்வு செய்வதே ஆய்வுகளில் சிறப்பானதாகும் என மேநாட்டு ஆய்வாளர் 'பிருந்தா பெய்க்' கூறியதற்கொப்ப பரவலான கொங்கு நாட்டில் தென் கொங்கை மட்டும் இவர் ஆய்வு செய்து வெளியிட்டிருப்பது சிறப்பானதாகும். இந்நூலில் தென்கொங்கின் வரலாற்றை புவியியல் மக்கட் பண்பாடு, தொல்குடிகள், பெருவழிகள், வணிக வளர்ச்சி, நாட்டார் சபைகள், இடப்பெயர்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள் என 19 அத்தியாயங்களில் விவரித்துள்ளரர். நொய்யலும், அமராவதியும் மற்றும் பல சிற்றாறுகளும் இப்பகுதியின் வளத்திற்குக் காரணம் என்பது கூறப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பும், கம்பு தானியமும் இப்பகுதிக்கே சிறப்பானவைகள் எனவும் கூறப்பட்டுள்ளது.

இப்பகுதியின் தொன்மைச் சிறப்பாக நீலகிரி, மறையூர் போன்ற மலைகளில் உள்ள குகைகளில் கி.மு.வுக்கு முன்னால் வரையப்பட்ட ஓவியங்கள் பற்றிக்கூறப்பட்டுள்ளது. இருளர், மலசர், காடர், தொதவர், முதுவர் என்ற பழங்குடிகள் இப்பகுதிகளில் வசிப்பதும், அவர்களுடைய பண்பாடுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள பெருவழிகளின், பலவற்றைப்பற்றியும், அவற்றுள் கிழக்கு, மேற்குக் கடற்கரைகளை இணைக்கும் இராஜகேசரிப் பெருவழியால் மேநாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற்றதெனவும், இப்பகுதியில் இருந்த வணிக மையங்கள், வணிகக் குழுக்கள், வணிகர்களுக்கென்றே இருந்த தனியான படைப்பிரிவுகள் பற்றியும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. நாட்டில் கிடைத்த ரோமானிய, யவனக் காசுகளில் இப்பகுதியில் கிடைத்தவைகளே அதிகம் என்பதையும், அவற்றுள் வெள்ளலூர் முதன்மையானது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.படியூரில் கிடைத்த மணிக்கற்களை கொடுமணலில் மாலைகளாக்கியதும், அவற்றால் ரோம் நாட்டு கஜானா காலியானதும் இப்பகுதியின் சிறபபெனக் கூறப்பட்டுள்ளது. பொன் அணி செய்பவர்களுக்கென்றே அக்காசாலை ஈஸ்வரம், அக்காசாலை மடம் என்பன இங்கிருந்தது வேறு எங்குமில்லாத சிறப்பெனவும் கூறப்பட்டுள்ளது. யொன் அணி செய்பவர்களுக்கென்றே அக்காசாலை ஈஸ்வரம், அக்காசாலை மடம் என்பன இங்கிருந்தது வேறு எங்குமில்லாத சிறப்பெனவும் கூறப்பட்டுள்ளது. நிலக்கொடைகள், பிரமதேயம் கோவில்களுக்கானவை, சதுர்வேதி மங்கலம் பிராமணர்களுக்கானவை எனவும் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் இங்கிருந்த மக்கள் சபைகள், மன்றாட்டு போன்றவைகள் பற்றியும் விளக்கியுள்ளார். இவைகளைப்பற்றிய ஆய்வுகள் அனைத்தும் இங்கு கிடைத்த கல்வெட்டுகள், ஆவணங்கள் மூலமாகவே ஆய்வது இவர் இந்நூலை எழுதியுள்ளது பாராட்டுக்குரியது. இறுதியாக இப்பகுதியிலுள்ள இடப்பெயர்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களைப் பற்றிய செய்திகளும் அனைவருக்கும் பயனுள்ள ஒன்றாகும்.

பி. அப்பன்

## இரும்புச் சுவர்கள் / சி.ஆர். ரவீந்திரன் நாவல் (ரூ 150, காவ்யா பதிப்பகம், சென்னை)

புதிய உற்பத்தி முறைகளின் விளைவாகப் புதிய வாழ்க்கை முறை வளர்ந்து வருகிறது. இதுவரை கிராமப்புற மக்கள் விவசாயம் சார்ந்தே தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். அந்த வாழ்க்கை முறை தொழில் நகரங்களைச் சார்ந்துள்ள கிராமப்பகுதிகளில் சலனங்கள் நிகழ்த்தித் தொழில் துறைகளுக்கு மக்களை விரட்டுகிறது. அந்த விதத்தில் புதிய வாழ்க்கைக்காக இலட்சக் கணக்கான இளம் பெண்கள் இடம் பெயர்கிறார்கள். அந்த விதத்தில் ஓர் எளிய கிராமத்திலிருந்து புதிய வாழ்க்கையைத் தேடிச் செல்லும் ஓர் இளம் பெண்ணின் வாழ்க்கை இந்த நாவலில் சொல்லப்பட்டிருக்கிறது. கனவுகளுடனும், கற்பனைகளுடனும் நூற்பு ஆலைக்குச் சென்று அடிமை வாழ்க்கையை அனுபவித்த பெண் ஒருத்தியின் வாழ்க்கை தான் இந்த நாவல். புதிய பொருளாதாரக் கொள்கைகளையும், நடைமுறைகளையும் கேள்விக்கு உள்ளாக்கும் எதார்த்தமான வாழ்க்கைதான் இந்த நாவல். இது காவேரியின் வாழ்க்கை அவளுடைய மனதிற்குள் காவிரி ஓடுவதைப் போலக் கற்பனையான வாழ்க்கை ஓடுகிறது. அந்த ஓட்டத்தின் இயல்பான தோற்றமே இந்த நாவல்.



# புதிய புத்தகங்கள்

## கீழைச் சிந்தனையாளர்கள் ஓர் அறிமுகம் - எச். பீர்முஹம்மது. புலம்பெயர்ந்த உலகில் ஓரியண்டலிசம் பற்றிய குறிப்புகள்

ஓரியண்டலிசத்தைப் பொறுத்தவரை கிழக்கத்தியப் பண்பாட்டின் கூறுகள் பற்றிய வரைபடமாகவும், கண்ணோட்டமாகவும் இருக்கிறது. வரலாற்று அடிப்படையில் ஓரியண்டலிசம் 18,19ம் நூற்றாண்டின் பிரெஞ்சு சிந்தனையாளர்கள் பயணக்குறிப்பாளர்கள் ஆகியோரின் ஆக்கங்களால் நிரம்பியிருக்கிறது. கிழக்கின் பண்பாட்டை அதன் தொன்ம நுட்பங்களை, வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பல ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் கவனித்திருக்கிறார்கள். மான்டெஸ்க், வில்லியம் பெக்ஃபோர்ட், தாமஸ்மூர், ஜான் வாப்ஃபங், ரால்ப் எமர்சன், தாமஸ்டி குன்ஸி, விக்டர் குகோ, ரிச்சர்ட் பிரான்ஸிஸ் பர்டன் போன்றோர் இந்த வகைப்பாட்டிற்குள் வருகிறார்கள்.

கீழைச் (ஓரியண்டலிச) சிந்தனையாளர்கள் குறித்த இத்தொகுப்பின் ஆக்கம், என் பொருளாதாரப் புலம்பெயர் வாழ்க்கையின் ஆறு ஆண்டுகால உழைப்பின் வெளிப்பாடு. மத்தியக் கிழக்கு பற்றிய இம்மாதிரியான எழுத்தின் தேவை தமிழ்க்சூழலில் நிறையவே இருக்கிறது என்பதை அப்போது உணர்ந்து கொண்டேன். மலையாளத்தில் ஏற்கனவே இது நடந்து முடிந்திருக்கிறது. அங்கு ஏன் நடந்தது என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். இந்தக் கவனப்படலோடு தேர்ந்தெடுத்த வாசிப்பும், சிந்தனையும் என்னை இன்னொரு திசைக்கு நகர்த்தியது. கலாச்சாரம் குறிப்பிட்ட இடைவெளியில் அரசியலுடனும், சமூகத்துடனும் இணைந்திருக்கிறது என்பார் எட்வர்ட் செய்த். இதனை உள்வாங்கி முன்னதன் அறிதல் முறையோடு கீழை அறிவுஜீவிகளின் அறிமுகம் குறித்த இத்தொகுப்பைக் கொண்டு வந்திருக்கிறேன்.

*(பீர்முகமது, விலை.ரூ 170 அடையாளம், திருச்சி)*

## சேவல்கட்டு : ம.தவசி நாவல்

கட்டு, சேவலுக்கும் சேவலுக்கும் நடப்பதா...? அல்லது மனிதனுக்கும் மனிதனுக்கும் நடப்பதா...? மனிதனில் தொடங்கி சேவலில் முடிவதும், சேவலில் தொடங்கி மனிதனில் முடிவதும் நடக்கலாம்; அல்லது சேவலில் இருந்து சேவலுக்கும், மனிதனில் தொடங்கி மனிதனுக்கும் முடியலாம். எது எப்படி இருந்தாலும் யாவும் மனிதர்கள் சம்பந்தப்பட்டதுதான். அவர்களின் வீரம், வலி, கோபம், அவமானம், பகட்டு,பெருமிதம் இன்னும் இன்னும் யாவற்றையும் உள்ளடக்கியது தான் சேவல் சண்டை போலும். இவையெல்லாம் சேவல் அறியுமா...?

நம்நாட்டில் மட்டுமல்ல; உலகின் பல இடங்களிலும் இந்த சேவல்கட்டு நடக்கிறது. நெருக்கடியான மனநிலை தொடர, விசிறி விடும் கொடூர சூழலில் எழுத்து ஒன்றே ஆசுவாசம் கொள்ளச் செய்கிறது போலும். (ம. தவசி)

*(ரூ: 70: புதுமைப்பித்தன் பதிப்பகம்*

## பனி குடித்த முயல் : கவிதைகள்: பட்டி. சு. செங்குட்டுவன்

மரபில் ஆரம்பித்து புதிதில் புகுந்து ஹைக்கூவுக்கு வந்துள்ள கவிஞர் பட்டி சு. செங்குட்டுவன் பக்கம் பக்கமாக எழுதக் கூடியவர். சின்ன வரிகளிலும் சிறப்பானச் செய்திகளை செதுக்கக் கூடியவர். பல்வேறு காட்சிகள் கவிதைக் கனலில் மூண்டெழுந்து தமிழோசையாகித் தத்துவார்த்தமாகியுள்ளன (எழிலவன்)

*(ரூ 40 : அன்புமொழி, விருத்தாச்சலம்)*

## "இன்று.. இப்போது என்ன செய்வது" புதிய ஜீவா கட்டுரைகள்

உலகயமாக்கல் சூழலில் தொழிற்சங்கங்கள் வலுவிழந்து போய் கொண்டிருக்கின்றன. சமூகப் பாதுகாப்பற்ற அந்நியனாக இந்தியசூழலில் நவீன தொழிலாளி மாறி கொண்டிருக்கிறான். தொழிலாளியாக நின்று இன்றைய உலகமயமாக்கல் சூழலில் தொழிலாளி வர்க்கம் எதிர் கொள்ள வேண்டியவை பற்றி சமரசமில்லாமல் இந்நூலில் பேசுவதன் மூலம் புதிய ஜீவா தன்னை எழுத்தாளன் என்ற நிலையிலிருந்து உயர்த்திக் கொண்டிருக்கிறார் என்பது பெருமைப்பட வைக்கிறது.

*(ரூ 150 : பாவை, சென்னை)*

### உதயபானு அறிக்கை (கேரள அரசு மது விலக்கு குறித்து ஆராய ஏ.பி. உதயபானு தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை) தமிழில்: ஹேமலதா திருஞான சம்பந்தம்

உள்ளூரில் வசதியோடு வலம்வரும் சாமிகள் போதைத்தீது என்பர். அவர்களும் ஒரு போதையில் இருந்தே அதை பேசுகின்றனர். அதே போதையின் பெயர் கடவுள், சாமி. கள் இல்லாமல் ஒரு சாமியார் பக்தர் இருக்க இயலாது. கல் இல்லாமல் ஒரு கோயிலைக் கட்டிவிட முடியும். கடவுள் என்பதே ஒரு போதை, மதம் என்னும் கள்ளோ ஒருவன் சாகும்போதும், அவன் செத்தபிறகாக சடங்குகளிலும், ஆண்டு நினைவு நாட்களிலும் கூட கட்டிபோடும். சங்கப்படுத்தும் (தமிழ் நாடன்)
*(ரூ50, கொங்கு மண்டல ஆய்வு மையம், உடுமலை)*

### கல்வெட்டுக் கவிதைகள் ஆங்கிலத்தில் Poems in scriptional

*1996ல் ஆரம்பிக்கப்பட்ட 'கல்வெட்டுப் பேசுகிறது' இதழில் வெளிவந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 58 கவிதைகளின் தொகுப்பு இது. லதா ராமகிருஷ்ணன் அவர்களால் ஆங்கில மொழிபெயர்ப்பாகி உள்ளது. இன்குலாப், தமிழச்சி முதல் சுப்ரபாரதிமணியன், பா. சத்தியமோகன் வரை இக்கவிதைகள் நீள்கின்றன. ஒரே தரத்திலானப் படைப்புகள் என்றில்லாவிட்டாலும் முக்ய படைப்பாளிகளை உள்ளடக்கி தற்கால தமிழ் நவீன கவிதையைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. தொகுப்பாசிரியர் சொர்ணபாரதி.*
*(ரூ 80, 160 பக்கங்கள் உதயக்கண்ணன் வெளியீடு, சென்னை)*

### இனி வரும் காலம். கவிதைகள். விழி.பா. இதயவேந்தன் வெளியீடு: உதயக்கண்ணன், 10,கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை-11. விலை ரூ 60/-

*வாழ்க்கையின் ருசி எது? கசப்பான இனிப்பா... அன்றி இனிப்பான கசப்பா என விசாரிக்கும் -62 கவிதைகளின் ஊர்வலமாக இதயவேந்தனின் "இனி வரும் காலம்". படைப்பாளிகள் தவிர்க்க வேண்டிய முக்கியப் பிரச்னை 'சொற்காமம்' என்பார். மாலன். எழுதப்பட்ட கவிதைகளின் சொற்றொடர்களின்றும் இன்னமும் எழுதப்படாத மவுனங்களின் துகள்களியே சுழல்கிறது இதயவேந்தனின் படைப்புலகம். அந்த சொல்லாத சேதிகளுக்காக தவமிருக்கிறான் சுவையுணர்வுகள் கூடிய வாசகன். இரத்தங்கசியும் மைத்துளியை தமிழ்வாசக உலகம் உணரும்; கூடுதலாயும் எதிர்பார்க்கும்; அதைத்தருகிற சக்தி இதயவேந்தனின் எழுத்துக்கு நிறையவே உண்டு.*

### பம்பாய்க் கதைகள்: சிறுகதைகள்: அன்பாதவன்

*கதவிடுக்கில் விரலை வைத்து இன்பம் காண முடியாது என்பது போல சில கலைப்படைப்புகள் உண்டு. அவை நம்மை சிறிய பொழுதுக்கேனும் ஸ்தம்பிக்கச் செய்து விடுவது உண்டு. இக்கதைகளை வாசிக்கையில் இத்தகைய அனுபவத்தை உணர முடிந்தது என்பதை உள்ளங்கை கிள்ளி சத்தியம் செய்யலாம். மும்பை வாழ்வைப் பற்றி இவர் பதிவு செய்ய இன்னும் நிறைய இருக்கிறது. ஒரு கருத்தைச் சொல்ல ஒரு கதையை கட்டமைக்க முடியும். ஒரு கதையைச் சொல்லியபடி ஒரு கருத்தை ஆழமாக விதைக்க முடியும் என்று மூளையின் முடிச்சுகளை அவிழ்த்து விடுபவர் அன்பாதவன் (மதியழகன் சுப்பையா) (ரூ 80: உதயகண்ணன், சென்னை - 11*





### பெரிய புராணம்: புதுக்கவிதை வடிவில்: பா. சத்தியமோகன்

*பெரிய புராணத்தின் செய்யுள் செறிவை அன்றாட வழக்கிலான புதுக்கவிதை நடைக்கு மாற்றுகையில் அக்கவித்துறுச் செறிவின் பெரும் பகுதியை அப்படியே தக்க வைக்க அவரால் முடிந்துள்ளது. பெரியபுராணம் போன்ற ஒரு பேரிலக்கியத்தை பொறுமையாப் படிக்க இயலாதவர்களுக்கு இந்த ஆக்கம் மிக மிக உதவியானதாக அமையும். (ஜெயமோகன்)*
*ரூ 600/ இருதொகுதிகள் லாவண்யா வெளியீடு கடிலூர் 96980 09614)*

### வாழ்புலம் இழந்த துயர்-மு. புஷ்பராஜன் ஹுரட்டுரைகள்

*பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தாயகத்தை மீட்கும் போரில் தமிழர்கள் வீழ்த்தப் பட்டார்கள். அந்த நெருக்கடி மிக்க காலகட்டத்தில் எதிர்த்தரப்பினர் எடுத்துவைத்த கருத்துகள் எவ்வளவு தவறானவை என்பதைச் சர்வதேச நிகழ்வுகளை மேற்கோள்காடிப் பதிவு செய்துள்ளார் மு.புஷ்பராஜன்.*
*(விலை. ரூ, 60*
*வெளியீடு: சாளரம்)*

### சூரல் பம்பிய சிறுகான் யாறு எம்.எஸ். ரஜினி பிரதாப்சிங்

*தலைப்பே வெகுவான கிளர்ச்சியை ஏற்படுத்துவது. நூலில் இருக்கும் அத்தனைப் பாடல்களுக்கும் இன்ன பாவினம் என்னும் நகவலும். இலக்கணமும் தரப்பட்டிருக்கிறது. இந்த வகையில் இஃதோர் முயற்சி.*
*இந்த நூலுக்கு நான் அணிந்துரைப்பது. பரிந்துரைப்பது. இதில் இருக்கும் பாடல்களின் கவிக் கூறுகளுக்காக அல்ல. தமிழில் கவிதை எழுத வருகிறவர். மரபானாலும். நவீனமானாலும் அறிமுகமாகி இருக்க வேண்டிய செய்யுள் வடிவங்கள். அவற்றின் இலக்கணங்கள். அவற்றுக்கான கவிதைகள் பற்றிய தகவல்களுக்காகவுே*
*ம!*
*_ நாஞ்சிநாடன்*
*(ரூ 150. அன்னைகாமாட்சி நிலையம், ஆதலையூர்)*

### அமிர்தம் 31 சிறுகதைகள் (2 தொகுப்புகள்) (ரூ 155: நிவேதிதா, சென்னை: 9444292899)

*முழுக்க சங்கீதக் கதைகளாக ஒரு தொகுப்பு ஜீகல்பந்தி:*
*நான் கொண்டுவந்தபின் அதேபோல் ஒத்த கருத்தாக்கத்தில் கதைகளைத் தொடலாம் என ஆர்வம் தட்டியதே நண்பர் கோரி கதையை வாசித்த போதுதான். நண்பர் சு. வேணுகோபாலிடம் இந்த முயற்சிபற்றி விவாதித்தபோது மிகுந்த ஊக்கம் அளித்தது மாத்திரம் அல்லாமல் என்னோடு சேர்ந்து தமிழ்க் கதைக் கருவூலத்தில் ஜரூராய்த்துழாலித் தேடி ஆரம்பித்து விட்டார்.*
*தேடுகையில் சில ஆச்சரியிமான இடங்களை வந்தடைந்தோம் இருவருமே. முதலாவதாக பெண் எழுத்தாளார்கள் இந்த சமையல். உணவு என்கிற சமாச்சாரத்தைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அப்படியே தொட்டாலும் பெண்ணியப் பார்வையாகவும், சமையல் என்பது அடிமைத் தனம் சார்ந்த ஒரு பெண்மை முத்திரை என்கிறாப் போலவும் அணுகினாப் போலிருந்தது அந்த சங்கீதக் கதைகள் தொகுதி. ஜீகல்பந்தி சற்று உயர்ந்த ரசனை கொண்டவர்களுக்கான உயர்ந்த ரசனை பற்றிய கதைகளின் சங்கமம் என்று அமைந்ததில் வியப்பில்லை. அடுத்த தொகுதி மானுட என்கிற அம்சத்தைத் தொடமுன் வந்தேன். நாஞ்சில்நாடன், ஜெயமோகன், அ. முத்துலிங்கம், சுப்ரபாரதிமணியன் உட்பட 31 எழுத்தாளர்களின் சிறுகதைகள்.*

# புதிய புத்தகங்கள்

## கொடிவழி : அருணகி

(மங்கையற்கரசி பதிப்பகம், சங்கரன் கோவில் *9444393903*)

வாழ்க்கையில் நாம் எதையாவது சாதிக்க வேண்டும். அதற்குத் தேவை திட்டமிடுதல். நமக்குக் கிடைத்து இருக்கின்ற நேரத்தில், எவற்றைப் படிக்கலாம்? பார்க்கலாம்? கேட்கலாம்? என்பதை வரையறுத்துக் கொண்டால் நேரத்தைச் சேமிக்கலாம்.

அதற்கு உதவிடும் வகையில் சிலகுறிப்புகளைத் திரட்டி நூலாகத் தொகுத்து தந்துள்ளார் அருணகிரி

## அறிவினான் ஆவது: ச. கல்யாணராமன் நாவல்

(ரூ *90*: முத்தமிழறிஞர் இல்லம், *-2*)

மிக இயல்பான ஓவியம் போல அமைந்துள்ளது. குடந்தை காவேரிக்கும் கொள்ளிடத்துக்கும் இடையில் இருக்கின்ற சிற்றூர் மக்களின் வாழ்க்கையின் இயற்கைப் படப்பிடிப்பான காட்சிகளை அளிக்கிறது. ஊர்களோடும் மக்களோடும் ஒன்றிப் பழகி அவர்களை நன்கு அறிந்த முறையில் இந்தப் புதினச் சித்திரத்தைத் தீட்டியுள்ளார் ஆசிரியர். பழமை புதுமை இரண்டும் இணைந்து காவேரியின் கிளை ஆற்றின் மென்மையான நீரோட்டத்தில். வாய்க்கால்களின் குளிர்நீரின் அசைவில் பசுமை வயல்களின் காற்று அலையில் தமிழ் நடை தாலாட்டிச் செல்கிறது. இனிய தூய நடை

## தமிழ் இலக்கிய வரலாறு: சிற்பிபாலசுப்ரமணியம், சேதுபதி

தமிழ் மொழியின் தோற்றம், முத்தமிழ் சிறப்பு, சங்க இலக்கியம் முதற்கொண்டு நவீன இலக்கியத்தின் விரிவான பரிமாணங்கள் பற்றி விரிவாய் பேசும் நூல் பல ஆவணங்கள், புகைப்படங்களை உள்ளடக்கியது. இலக்கிய மாணவர்களுக்கு அடிப்படைநூல்களில் ஒன்று.

(ரூ *200*, கவிதா, சென்னை: *044 - 29364243*)

## பருத்திக்காடு: வெளியீட்டாளர்: சி. ரவி

திருப்பூரைச் சார்ந்த 32 படைப்பாளிகளின் தொகுப்பு. திருப்பூர் பத்தகக் கண்காட்சி வெளியீடாக வந்துள்ளது. கவிதைகள், கட்டுரைகள் பொதுத்தளத்திலிருந்தும் திருப்பூரைச் சார்ந்தும் உருவாக்கப்பட்டிருக்கின்றது. முக்யத்துவம் வாய்ந்தது. தொகுப்பின் வெளியீட்டாளரும் சாமக்கோடாங்கிரவி என்ற பெயரில் எழுதின படைப்புகள் இடம் பெற்றுள்ளன.

அரிய தொகுப்ப

(ரூ *70*: பிரதிகளுக்கு: சி.ரவி: *9994079600*)

## அங்கு நீயும் இங்கு நானும் : சூர்யநிலா கவிதைகள்

காதல் என்பது எல்லோருக்கும் பொதுவான ஒன்று தான். அதை பொதுவில் வைப்போம் என வைத்துப் பார்த்தால் காதல் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாய் இருக்கிறது. ஒருவருக்கு சிரி என்பது மற்றொருவருக்கு தவறாய்படுகிறது. எவ்வொருவருக்கும் ஒவ்வொரு மழை. இங்கே தன் பால்ய வயதில் பள்ளி வயதில் பருவ வயதில் பகிர்ந்து கொண்ட உணர்ந்த அனுபவித்த காதலின் ஒட்டு மொத்த கலவையாய் "அங்கு நீயும் இங்கு நானும்" கவிதை தொகுப்பில் பரவசப்படுத்தியிருக்கிறார் கவிஞர் சூர்யநிலா. காதலை பொதுவில் வைப்போம். காதல் புரியனும்னா அனுபவித்துப் பார். அதுக்கு சிறகு முளைச்சிருக்கும். கவிதையா பேசும். அருவியா கொட்டும். மனசு பறக்கும். கனவா வரும்... பாஸ்... காதலை அனுபவிச்சு பாருங்க... அது ஒரு இம்சையான சந்தோஷம்

அன்பாலயம் பதிப்பகம்